விவசாயிகள் (கடன்) பரிகார ஆக்ட்



மதராஸ் கவர்ன்மெண்ட் கனம் முதல் மந்திரி

சக்ரவர்த்தி - ராஜகோபாலாச்சாரியார்

விலை அணா 4.

மதராஸ் மாகாண

விவசாயிகள் (கடன்) பரிகார ஆக்ட்

பாரதி வாசகசாலை
கம்பன் நூல் நிலையம்
கோட்டையூர்.
நன்கொடையாளர் இ. வி. அ. ள. ஙொ.
ஊர் கொட்டையூர் தேதி 28. 6. 40
புத்தக எண் 8/72. பதிவு எண் 672

விலை அணா 4 மாத்திரம்

சி. வி. நாயுடு, அட்வகேட், திருவள்ளூர், எம். எஸ். எம். ரயில்

விவசாயிகள் (கடன்) பரிகார ஆக்ட்

முன்னுரை.

விவசாயிகளின் கடன் துயரை நீக்குவதற்காக சென்னை கவர்ன்மெண்டாரால் கொண்டுவரப்பட்டு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டத்தைப்பற்றிய விவரங்களை இப்பொழுதே பொதுமக்கள் நன்கு தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். இது ஒரு நூதன அரசாங்கத்தாரால் கொண்டுவரப்பட்ட புதிய சட்டம். இந்தச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் யாவையும் நம் நாட்டு விவசாயிகள் அடையவேண்டுமென்பது சென்னை சர்க்காரின் நோக்கம். இச்சட்டம் சட்டசபைகளில் நிறைவேற்றப்பட்ட பிறகு பழைய கடன்களுக்காக கடன்காரர்களிடம் புதிய பத்திரம் கடன் கொடுத்தோர் சிலர் எழுதி வாங்கி வருகிறார்களென்ற புகாரை நான் சில இடங்களில் கேட்டிருக்கிறேன். அவ்வாறு நடப்பது உண்மையானால் இதை தடுக்க வேண்டிய பொறுப்பு பொதுமக்களுடைய தாகுமே யல்லாது சர்க்கார் இது விஷயத்தில் உடனே பிரவேசிப்பார்களென எதிர் பார்க்கவேண்டியதில்லை. ஆகையால் கடன் நிவாரண சட்டத்தினால் விவசாயிகள் எவ்வாறு பூரண பலனை அடையலாம் என்ற விவரங்களை நாம் நம் நாடெங்கும் உடனே பரப்பவேண்டும். எனவே இச்சமயத்தில் இந்தச் சட்டத்தை தமிழில் மொழி பெயர்த்து வியாக்யானங்களுடன் வெளியிட முன்வந்திருக்கும் என் நண்பர் ஸ்ரீமான் வி. வி. நாயுடு அவர்களின் நோக்கத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன். சட்டம் அமுலுக்கு வரும் சமயத்திலேயே இந்நூல் வெளியிடப்படுவதால் அனுபவத்தில் ஏற்படக்கூடிய கஷ்டங்களுக் கெல்லாம் இந்த நூலில் சமாதானம் கிடைக்குமென்று எதிர் பார்ப்பதற்கில்லை. அடுத்த பதிப்பில் அதிகம் காணப்படலாம். இந்த நூலிற்கு மிகவும் மலிவான விலை தான் போடப்பட்டிருக்கிறது. ஆகையால், தமிழ் நாட்டினர் யாவரும் இந்த சட்டத்தினாலும், இந்த பதிப்பினாலும் ஏற்படக் கூடிய பூரண பலனை அடைவார்களென்று நம்புகிறேன்.

எம். பக்தவத்ஸலம்.

பார்லிமெண்டரி காரியதரிசி,

லோகல் அட்மினிஸ்ட்ரேஷன்.

மயிலாப்பூர்,
22-3-1938.

விவசாயிகள் (கடன்) பரிகார ஆக்ட்

முகவுரை.

சென்னை மாகாண விவசாயிகளுக்கு பரிகாரம் அளிப்பதைக் குறித்த ஆக்ட் மொத்தத்தில் 28 செக்ஷன்கள் கொண்டது. இதை வட்டியை பரிகாரம் செய்யும் ஆக்ட் என்று சொல்லலாம். செக்ஷன்கள் 1, 2-ஐ சுலபமாய் தெரிந்துக் கொள்ளலாம். இந்த ஆக்ட் விவசாயிகளுக்கு பரிகாரம் அளிப்பதை குறித்ததாகையால், முதலில் யார் 'விவசாயி', யார் அல்ல என்பதை அறிந்துகொள்ள செக்ஷன்கள் 3 (ii), 5, 6-யையும், 'கடன்' என்பதை அறிய 3 (iii)-யையும், விவசாயிகளுக்கு எம்மாதிரி பரிகாரம் கொடுப்பதென்பதை அறிய செக்ஷன்கள் 7, 8, 9, 15, 19 முதல் 24 வரையிலும் பார்க்கவும். மொத்த ஆக்டும் 4, 10, 16-வது செக்ஷன்களில் கண்ட கடன்களை பாதிக்காது. அந்த கடன்கள் பூராவையும் கொடுத்தாகவேண்டும். செக்ஷன் 8 படி 1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1 தேதிக்கு முன் ஏற்பட்ட கடன்களுக்காகவும், 9, 11 செக்ஷன்கள்படி 1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1 தேதியன்றாவது, அதற்கு பிறகாவது ஏர்ப்பட்ட கடன்களுக்காவும் விவசாயிகளுக்கு எம்மாதிரி பரிகாரம் கொடுக்க முடியுமோ அவைகளைக் குறித்து வியக்தமாய் தெரிவிக்கிறது. 13-வது செக்ஷன், இந்த ஆக்ட் அமுலுக்கு வந்த பிறகு, புதிய கடன்களுக்கு விதிக்கவேண்டிய வட்டி விகிதத்தை குறிக்கிறது. 14-வது செக்ஷன் ஹிந்து ஏக (ஒரே) குடும்பத்தில் விவசாயிகளும், விவசாயி அல்லாதவர்களும் இருந்தால் கடனை எம்மாதிரி தீர்ப்பதென்பதை தெரிவிக்கிறது. 15, 16, 17 செக்ஷன்கள் குத்தகை தொகைகளை 1345-ம் பசலிக்கும் அதற்கு முன்னும் கொடுக்கவேண்டிய பாக்கியிருந்தால் கொடுக்கவேண்டியதில்லை என்றும், 1346, 1347-பசலிகளின் பாக்கிகளை எம்மாதிரி பைசல் பண்ணவேண்டு மென்பதையும் தெரிவிக்கிறது. கோர்ட்டு செலவுகள், டிக்ரிகளை திருத்துதல், நிறைவேற்றுதலை நிறுத்தி

வைத்தல், கடனிறுக்க வகையில்லாதவர்கள் விஷயத்தில் [அதாவது கடன் திருப்பிகொடுக்க யில்லாதவர்கள் (இன்சால் வெண்டுகள்) விஷயத்தில்] நடத்தவேண்டிய முறைகள், ஸ்தாவர சொத்துக்களை ஏலம்போடுதல், ஷை ஏலத்தொகையை ரத்து செய்தல், கடன்காரரால் பராதீனம் செய்யப்பட்டவைகளின் மேல் நடவடிக்கைகள் முதலியவைகளை செக்ஷன்கள் 18 முதல் 25 வரையில் கூறுகின்றன. செக்ஷன்கள் 26, 27 ஒருவர் விவசாயியா? அல்லவா? என்பதைக்குறித்து ஜில்லா கலெக்டரிடமிருந்தும், பஞ்சாயத்துகள், ஜில்லா போர்டுகள், முனிஸிபாலிடிகள், சென்னை கார்ப்பொரேஷன் இவர்களிடமிருந்து விஷயங்களை அறிய மனுபோடவும், மேற்கூறியவர்கள் கொடுக்வேண்டிய அத்தாக்ஷி பத்திரங்களைக் குறித்தும் தெரிவிக்கின்றன.

சர்க்கார் விதிகள் செய்யும் அதிகாரத்தைக் குறித்து செக்ஷன் 28 கூறுகிறது. அடுத்த பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள அட்டவணையைப் பார்க்கவும்.

புத்தகத்தை பெரிதாக்கவேண்டி வீண் விஷயங்களை புகுத்தவில்லை. ஆயினும், அவசியமானவரையில் வியாக்யானங்கள் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றன.

விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்கவேண்டி, ஒரே பிடிவாதமாய் இக்கடன் பரிகார ஆக்டைக் கொண்டுவந்து பேருதவி செய்தவரான மதராசு கவர்ன்மெண்ட் பிரதம மந்திரி கனம் சக்ரவர்த்தி. ராஜகோபாலாசாரியரை எல்லா விவசாயிகளும் போற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அன்னார் நம் நாட்டிற்கு பல் வேறு அனுகூலங்களைச் செய்ய அவர் நீண்ட ஆயுளையும், திடசரீரத்தையும் அடைந்திருப்பாராக!

திருவள்ளூர்
21—3—38

ஸி. வி. நாயுடு,
அட்வொகேட்.

விவசாயிகள் (கடன்) பரிகார ஆக்டு

அட்டவணை

		பக்கம்
	முன்னுரை	2
	முகவுரை	3-4
	1-ம் அத்தியாயம்—பீடிகை	
சேக்ஷன்.		
1.	சுருக்கமான பெயர்	7
2.	வியாபகம்	7
3.	அர்த்தம்	7
(i)	நபர்	8
(ii)	விவசாயி	8
(iii)	கடன்	12
(iv)	குத்தகை தொகை	12
(v)	கடன்காரர்	13
4.	சில கடன்களும் பொறுப்புகளும் பாதிக்கப்பட மாட்டாவென்பது	13
5.	அவிபக்த ஹிந்து குடும்பங்கள் முதலியவைகளுக்காக விசேஷ நிபந்தனை	16
6.	ஹிந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் விவசாயிகளா யிராதவர்களுடைய குமாரர்களும் சந்ததியார்களும் விவசாயிகளாகாரென்பது	16
	2-ம் அத்தியாயம்	
7.	விவசாயிகளால் செலுத்தப்படத்தக்க கடன்களைக் குறைக்கவேண்டுமென்பது	17
8.	1932-ம்ஸ்ரீ அக்டோபர்மீ 1உக்கு முன் ஏற்பட்ட கடன்களுக்காக நிபந்தனை	18
9.	1932-ம்ஸ்ரீ அக்டோபர்மீ 1உ அன்றாவது அதற்குப் பிறகாவது ஏற்பட்ட கடன்களுக்காக நிபந்தனை	21
10.	விலக்குகள்	23
11.	சில விஷயங்களில் செலவு முதலியவைகளைப்பற்றிய நிபந்தனை	24
12.	பழைய கடன்களுக்கு விவசாயிகளால் செலுத்தப் படத்தக்க வட்டி வீதம்	25

6 விவசாயிகள் (கடன்) பரிகார ஆக்ட் அட்டவணை

13. புதிய கடன்களுக்கு விவசாயிகளால் செலுத்தப்படத் தக்க வட்டி வீதம் 26
14. குறித்த சில விஷயங்களில் கடன் பாகத்தைப் பிரித்துவிடுவது 27

3-ம் அத்தியாயம்

15. நிலத்துக்குடையவர்கள் முதலியவர்களுக்குச் சேர வேண்டிய குத்தகை தொகை பாக்கிகள் திட்டத்துக்குட்பட்டுத் தீர்க்கப்படுவது 28
16. நிலத்துக்குடையவர் லாண்ட்செஸ் என்னும் வரியையும் செலவுகளையும் வசூலிக்கப் பாத்தியதையுடையவராவாரென்பது 35
17. சில விஷயங்களில் குத்தகைத் தொகைக்கான வியாஜ்ஜியங்கள் முதலியவைகளின் காலவரையறையை அதிகப்படுத்துவது 36

4-ம் அத்தியாயம்

18. சில விஷயங்களில் செலவுகளைப்பற்றிய நிபந்தனை ... 38
19. சில டிகிரிகளைத் திருத்துவது 39
20. நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பது 39
21. கடனிறுக்கச் சக்தியில்லையென்று தீர்மானிக்கும் விஷயங்கள் 40
22. அசையும் பொருள் விற்பனை செய்யப்பட்ட சில விஷயங்களில் பிரத்தியேகமான நிபந்தனை ... 41
23. அசையாப் பொருளின் விற்பனைகளைச் சில விஷயங்களில் ரத்துசெய்ய வேண்டுமென்பது ... 42
24. விற்பனையை ரத்து செய்வது காரணமாகப் பிரயோகப்படவேண்டிய நிபந்தனை 43
25. கடனுளி பராதீனம் செய்வது 43
26. சில விஷகங்களைக் குறித்து டிஸ்டிரிகிட் கலெக்டர் சங்கதி தெரிவிக்கவேண்டுமென்பது ... 44
27. சில விஷயங்களைக் குறித்துப் பிரதேச அதிகார சபைகளின் நிர்வாக அதிகாரிகள் சங்கதி தெரிவிக்கவேண்டுமென்பது 45
28. விதிகள் செய்ய அதிகாரம் 45
ஆக்டின் நோக்கம் 46
கமிட்டியாரின் ரிபோர்ட் 84

விவசாயிகள் (கடன்)

பரிகார ஆக்ட்

MADRAS ACT No. IV OF 1938.

1938-ம் வருஷத்து 4-வது ஆக்ட்.

AN ACT TO PROVIDE FOR THE RELIEF OF INDEBTED AGRICULTURISTS IN THE PROVINCE OF MADRAS.

சென்னை மாகாணத்தில் கடன்பட்டிருக்கும் விவசாயிகளுக்குப் பரிகாரம் அளிப்பதற்காக நிபந்தனை ஏற்படுத்துவதற்கான ஆக்ட்.

சென்னை மாகாணத்தில் கடன் பட்டிருக்கும் விவசாயிகளுக்குப் பரிகாரம் அளிப்பதற்காக நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுவது என்னவென்றால் :—

1-ம் அத்தியாயம்—பீடிகை.

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, விவசாயிகளுக்குப் பரிகாரம் அளிப்பதைக் குறித்த சென்னப்பட்டணத்து 1938-ம் வருஷத்திய ஆக்ட் என்று சொல்லலாம்.

வியாபகம்.

2. இது சென்னை மாகாணம் முழுமையும் வியாபிக்கும்.

அர்த்தம்.

3. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன் பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,

'நபர்' (i) 'நபர்' என்பது யாதொரு தனி நபர் என்று அர்த்தமாவது மல்லாமல், யாதொரு அவி பக்தஹிந்து குடும்பம் என்பதும் யாதொரு மருமகத் தாயம் அல்லது அலியசந்தான தரவாடு அல்லது தாவழி என்பதும் அதில் அடங்கும். ஆனல், சட்டப் படிச்சேர்ந்த ஒரு சபை என்பதாவது தரும சம்பந்த மான அல்லது மதச் சம்பந்தமான ஒரு ஸ்தாபனம் என்பதாவது சட்டப்படிச் சேர்ந்திராத யாதொரு கம்பெனி அல்லது சங்கம் என்பதாவது அதில் அடங்காது;

'விவசாயி' (ii) 'விவசாயி' என்பது—

(*a*) சென்னை மாகாணத்திலே, யாதொரு மியுனிஸிபாலிடி அல்லது கண்டோன்மென்ட்டுக்குள் இருக்கும் நிலமாயிராமல் மாகாண கவர்ன்மென்டாரால் நிலவரி விதிக்கப்பெற்றிருக்கும் அல்லது கவர்ன்மென்டாரால் கொடுக்கப்பட்ட அல்லது ஊர்ஜ்ஜிதம் செய்யப் பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட யாதொரு க்ரான்டின்படி வரி யில்லாமல் கைப்பற்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் யாதொரு விவசாய நிலத்தில் அல்லது தோட்டக்கால் நிலத்தில் விற்பனை செய்யத்தக்க பாத்தியதை யுள்ள யாதொரு நபர் என்று அர்த்தமாகும்; (மேற்படி நிலவரியில் பேஷ்கஷ் என்பதும் க்விட்ரென்ட் என்பதும் அடங்குவதாகக் கருதப்படும்;) அல்லது

(*b*) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப் பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டின்படி யாதொரு நிலத்துக்குடையவரின் கீழ் பாயக்காரியாகவோ ரயத்தாகவோ கீழ்க்குத்தகைதாரராகவோ

ஷை நிலத்தில் பாத்தியதையுள்ள யாதொரு நப ரென்று அர்த்தமாகும்; அல்லது

(c) மேற்படி நிலத்திலே, மலையாளத்துப் பாயக் காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பாத்தியதை யுள்ள யாதொரு நபரென்று அர்த்தமாகும்; அல் லது

(d) (a), (b) அல்லது (c) உட்பகுதியில் குறிப்பிட் டிருக்கும் எந்த நபரிடமிருந்தாகிலும் மேற்படி நிலத் தின் குத்தகை பெற்றிருக்கும் அல்லது மேற்படி நிலத்தின் கீழ்க் குத்தகைதாரரா யிருக்கும் யாதொரு நபரென்று அர்த்தமாகும்.

ஆனல், யாதொரு நபர்—

(A) 1938-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதி யோடு முடிவாகும் இரண்டு அரசிறை வருஷங்களில் ஏதாவது ஒன்றில் 1922-ம் வருஷத்திய இந்து தேச த்து வருமானவரி ஆக்டின்படியாகிலும் யாதொரு இந்திய சமஸ்தானத்தின், அல்லது அன்னிய அர சாங்கத்தின் வருமானவரிச் சட்டங்களின் படியாகி லும் வருமான வரி விதிக்கப் பெற்றிருந்தாலும்,

(B) 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்கு அடுத்து முந்தியுள்ள இரண்டு வருஷங்க ளில், 1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்டிரிக் மியுனிஸிபாலிடிகளாக்டின்படியாவது 1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப் பட்ட ணத்து மியுனிஸிபல் ஆக்டின்படியாவது 1924-ம் வருஷத்திய கன்டோன்மென்டுகளாக்டின்படியா வது பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள வேறே எந்த மாகா ணத்திலாகிலும் யாதொரு இந்திய சமஸ்தானத்திலா கிலும் இந்தியாவிலுள்ள யாதொரு அன்னிய

சமஸ்தானத்திலாகிலும் மியுனிஸிபல் அல்லது பிரதேச அதிகார சபைகள் விஷயமாய் ஒழுங் கேற்படுத்தும் யாதொரு சட்டத்தின்படியாவது 1930 -ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 26 தேதிக்கு முன் யூனி யனு யிருந்த ஒரு பஞ்சாயத்தில் 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுக ளாக்டின் படியாவது விவசாயமல்லாத வேறே யாதொரு தொழிலி லிருந்து கிடைத்த முந்நூறு ரூபாய்க்கு மேற்பட்ட அரை வருஷ வருமானத்தின் மேல் தொழில்வரி விதிக்கப் பெற்றிருந்தாலும்,

(C) 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்கு அடுத்து முந்தியுள்ள இரண்டு வருஷங்க ளில், 1920-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்து டிஸ்ட்ரிட் மியுனிஸி பாலிடிக ளாக்டின்படியாவது, 1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப் பட்ட ணத்து மியுனிஸிபல் ஆக்டின்படியாவது 1924-ம் வருஷத்திய கன்டோன்மென்டுக ளாக்டின்படியா வது, ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள வேறே எந்த மாகா ணத்திலாகிலும் யாதொரு இந்திய சமஸ்தானத்திலா கிலும் மியுனிஸிபல் அல்லது பிரதேச அதிகார சபைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்தும் யாதொரு சட்டத்தின் படியாவது 1930-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 26-ந் தேதிக்கு முன் யூனியனுயிருந்த ஒரு பஞ்சாயத்தில் 1920-ம் வருஷத்திய சென்னப்பட்ட ணத்து லோகல் போர்டுகளாக்டின்படியாவது கட்டி டங்கள் விஷயமாய் அல்லது விவசாய நிலங்களல் லாத வேறே நிலங்கள் விஷயமாய் சொத்து அல்லது வீட்டு வரி விதிக்கப் பெற்றிருந்தாலும்,

(D) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப் பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டின்படி

ஒரு பூஸ்திதியின் அல்லது அதன் யாதொரு பங்கு அல்லது பாகத்தின் நிலத்துக்குடைய வராயிருந்து, அந்த பூஸ்திதி, பங்கு அல்லது பாகம் விஷயமாய் 500 ரூபாய்க்கு மேற்பட்ட ஒரு தொகை பேஷ்கஷ்ஷாகச் செலுத்தப்பட்டாலும், 100 ரூபாய்க்கு மேற்பட்ட ஒரு தொகை க்விட் ரென்டாகவோ, ஜோடியாகவோ, கட்டுப்படி யாகவோ, பொறுப்பு முதலியதாகவோ செலுத்தப்பட்டாலும், மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டின்படி ஒரு ஜன்மியாயிருந்து, 500 ரூபாய்க்கு மேற்பட்ட யாதொரு தொகையை நிலவரியாக மாகாண கவர்ன்மென்டாருக்குச் செலுத்தினுலும், அந்த நபர் 'விவசாயி' யென்று கருதப்பட மாட்டார்; ஆனல் மேலே (C) பகுதியில் குறிப்பிட்டிருக்கும் கட்டிடங்களும் நிலங்களும் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலுஞ் சரி, சொந்தக்காரரின் அனுபோகத்திலிருந்தாலுஞ் சரி அவைகளின் வருஷாந்த மொத்த வாடகை மதிப்பு அல்லது குத்தகை மதிப்பு 600 ரூபாய்க்குக் குறைவாயிருக்கக்கூடாது.

விவரணம்.—(C) விலக்கு நிபந்தனையின் காரியங்களுக்காக, யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் வருஷாந்த வாடகை மதிப்பு அல்லது குத்தகை மதிப்பானது—

(1) வருஷாந்த வாடகை மதிப்பை அல்லது குத்தை மதிப்பை ஆதாரமாகக்கொண்டு வரி விதிக்கப்படுகிற பட்சத்திலே, அந்த மதிப்பென்று கருதப்படும்;

(2) மூலதன மதிப்பை ஆதாரமாகக் கொண்டு வரி விதிக்கப்படுகிற பட்சத்திலே, மூலதன மதிப்பில் ஐந்து சதவீதமென்று கருதப்படும்;

(3) வேறே எந்த விஷயத்திலாகிலும், நிர்ணயிக்கப்பட்ட விதமாய் நிச்சயித்தறியப்பட்ட மதிப்பென்று கருதப்படும்;

(iii) 'கடன்' என்பது யாதொரு விவசாயினிடமிருந்து ரொக்கமாகவோ வஸ்து ரூபமாகவோ சேரவேண்டியதாயிருக்கும் யாதொரு பொறுப்பு ஈடுகாட்டப்பட்டதாயிருந்தாலுஞ்சரி, ஈடு காட்டப்படாததாயிருந்தாலுஞ்சரி, யாதொருஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாரின் டிக்ரி அல்லது உத்திரவின்படிச் செலுத்தப்படத்தக்கதாயிருந்தாலுஞ்சரி மற்றப்படிச் செலுத்தப்படத் தக்கதாயிருந்தாலுஞ்சரி அப்படிப்பட்ட பொறுப்பு என்று அர்த்தமாகும்; ஆனல் அதில் (iv) பகுதியில் அர்த்தம் சொல்லப்பட்டபடிக்குள்ள குத்தகைத் தொகை அல்லது 1929-ம் வருஷத்திய மலையாள பாயக்காரி ஆக்டு செக்ஷன் 3 (*l*) (i) விவரித்திருக்கும் 'கானர்த்தம்' என்பது அடங்காது;

'கடன்'

(iv) 'குத்தகைத் தொகை' என்பது, ஜமீன்களிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள யாதொரு ஜமீனின் நிலத்துக் குடையவருக்குச் செலுத்தப்படத்தக்கதாய், ஜமீன்களிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள குத்தகைத்தொகை அல்லது மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள குத்தகைத் தொகை அல்லது

'குத்தகைத் தொகை'

மிச்சவாரம் அல்லது மேலேகண்டபடி செலுத்தப்படத்தக்க க்விட்ரென்ட், ஜோடி, கட்டுபடி அல்லது பொறுப்பு முதலியவைகளுக்காக யாதொரு ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாரின் டிக்ரி அல்லது உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி அந்த குத்தகைத் தொகை என்றாகிலும் மிச்சவாரம் என்றாகிலும் க்விட்ரென்ட் முதலியவை என்றாகிலும் அர்த்தமாகும்; மேலும், அதில், அதற்காகச் செலுத்தப்படத்தக்க வட்டி என்பதும் அடங்கும்; ஆனால், யாதொரு ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட் மூலமாய் அதை வசூலிப்பது விஷயமாகக் பிடிக்கும் செலவுகள் என்பதாவது 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளாக்ட் 88-வது பிரிவின்படி நிலத்துக்குடையவரால் வசூலிக்கப்படத்தக்க லாண்ட் ஸெஸ் என்னும் நில வரியின் பாகம் என்பதாவது அதில் அடங்காது; மேலும்,

‘கடன்காரர் (கடன் கொடுத்தவர்)’

(v) ‘கடன்காரர் (கடன் கொடுத்தவர்)’ என்பதில், அவருடைய வாரிசுகள், சட்டசம்மதமானபிரதிநிதிகள், அவரிடமிருந்து ஒப்படைபெற்றவர்கள் என்பதும் அடங்கும்.

சில கடன்களும் பொறுப்புகளும் பாதிக்கப்படமாட்டாவென்பது.

4. யாதொரு விவசாயிக்கு ஏற்பட்டிருப்பவைகளாய், அடியிற்கண்ட தலைப்புகளின்கீழ் வரும் கடன்களும் பொறுப்புகளும் இந்த ஆக்டில் கண்டதெதனாலும் பாதிக்கப்படமாட்டா :—

(*a*) மாகாண கவர்ன்மென்டாருக்குச் செலுத்தப்படத்தக்க யாதொரு தீர்வை, வரி அல்லது

ஸெஸ், அல்லது கடனுகவோ மற்றப்படியோ அவர் களுக்குச் சேரவேண்டிய வேறே யாதொருதொகை ;

(*b*) மத்திய கவர்ன்மென்டாருக்குச் செலுத்தப் படத்தக்க யாதொரு தீர்வை, வரி அல்லது ஸெஸ், அல்லது கடனுகவோ மற்றப்படியோ அவர்களுக்குச் சேரவேண்டிய வேறே யாதொரு தொகை ;

(*c*) யாதொரு பிரதேச அதிகார சபையாருக் குச் செலுத்தப்படத்தக்க யாதொரு வரி அல்லது ஸெஸ், அல்லது கடனுகவோ மற்றப்படியோ அவர் களுக்குச் சேரவேண்டிய வேறே யாதொரு தொகை;

(*d*) யாதொரு மியுனிஸிபாலிடியிலாவது யாதொரு கன்டோன்மென்டிலாவது 1930-ம் வரு ஷம் ஆகஸ்ட் மாசம் 26 தேதிக்குமுன் யூனியனு யிருந்த யாதொரு பஞ்சாயத்திலாவது உள்ள வீட்டுச் சொத்தின் ஈட்டின்பேரில் மாத்திரமே வாங்கப்பட்ட யாதொரு கடன் ;

(*e*) யாதொரு நில அடைமான பாங்க் உட்பட கோவாபரேடிவ் ஸொஸைடீஸ் என்னும் கூட்டுறவு சங்கங்களைக் குறித்த 1932-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்து ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட அல்லது ரெஜிஸ்டர் செய்யப்பட்டதாகக் கருதப் படும் யாதொரு கூட்டுறவு சங்கத்துக்குச் சேர வேண்டிய எந்தத் தொகை விஷயமாயாகிலும் ஏற் பட்டுள்ள யாதொரு பொறுப்பு அல்லது பார்லி மென்ட் சபையாரால் ஏற்படுத்தப்பட்ட யாதொரு ஆக்டையாவது யாதொரு பிரத்தியேக இந்து தேசத் துச் சட்டத்தையாவது ராயல் சார்ட்டர் என்னும் ராஜ சாசனத்தையாவது லெட்டர்ஸ் பேடென்ட் என்னும் அதிகார பத்திரத்தையாவது அனுசரித்து ஏற்படுத்தப்பட்ட எந்தக் கார்ப்போரேஷனுக்கு சேரவேண்டிய யாதொரு கடன்பொறுப்பு :

(*f*) நம்பிக்கைத் துரோகத்தினுல் ஏற்படும் பொறுப்பு ;

(*g*) கோர்ட்டாரின் டிக்ரியின்படியோ மற்றப் படியோ ஜீவனும்சம் விஷயமாய் ஏற்படும் யாதொரு பொறுப்பு ;

(*h*) 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1 தேதி யன்று வேறே யாதொரு சொத்தையும் சொந்தத் தில் வைத்திராத ஒரு ஸ்திரீக்கு அந்தத் தேதியன்று சேரவேண்டியதாயிருந்த யாதொரு கடன் அல்லது கடன்கள் ; ஆனல், அந்தக் கடன் அல்லது கடன் களின் அசலானது மூவாயிரம் ரூபாய்க்கு மேற்பட் டிருக்கக்கூடாது.

விவரணம்.—இந்தப் பகுதியின் காரியத்துக்காக, கடன்கார ஸ்திரீவசித்துக்கொண்டிருந்த வீடாவது, அதிலிருந்த எவையேனும், மேஜை, நாற்காலி முத லிய சாமான்களாவது, அவருடைய தட்டுமுட்டுச் சாமான்களாவது உடைகளாவது நகைகளாவது அதுபோன்ற சொந்த உபயோகத்துக்குரிய உடமை களாவது சொத்தென்று கருதப்படமாட்டா.

(*i*) யாதொரு விவசாயத் தொழிலாளி அல்லது கிராமப் பிரதேசத்துத்தொழிலாளிக்குச் சேரவேண் டிய எவையேனும் கூலித்தொகைகள்.

ஆனல், (*e*) பகுதிகளில் குறிப்பிட்டிருக்கும் பொறுப்புகள் கூட்டுறவு சங்கத்திற்கு ஒப்படைசெய் வது காரணமாக ஏற்படுகிற பட்சத்திலே, 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1 தேதிக்குமுன் மேலே கண்டபடி ஒப்படை செய்யப்பட்டிருக்கவேண்டும் அல்லது அந்த ஒப்படையானது யாதொரு கூட் டுறவு சங்கத்தால் கொடுக்கப்பட்ட கடனை ஷை சங் கத்திற்கு ஒப்படை செய்ததால் ஏற்பட்டதாயிருக்க வேண்டும்.

அவிபக்த ஹிந்து குடும்பங்கள் முதலியவைகளுக்காக விசேஷ நிபந்தனை.

5. யாதொரு மருமக்கத்தாயம் அல்லது அலிய சந்தானத் தரவாடு அல்லது தாவழியல்லாத வேறே யாதொரு அவிபக்த ஹிந்து குடும்பமானது. 3 (ii) பிரிவுடன் சேர்த்துள்ள (A), (B), (C) விலக்கு நிபந்தனைகளில் குறிப்பிட்டிருக்கும் வரிகள் விதிக்கப்பெற்றாலும், அதே பிரிவுடன் சேர்த்துள்ள (D) விலக்கு நிபந்தனையில் குறிப்பிட்டிருக்கும் நபர்களின் வகையில் அடங்கினாலும், 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1 தேதியன்று மேற்படி குடும்பத்தைச் சேர்ந்தவரா யிருந்த எந்த நபரும் 13-வது பிரிவில் தவிர இந்த ஆக்டின் காரியங்களுக்காக விவசாயியாகக் கருதப்படமாட்டார்.

ஹிந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் விவசாயிகளாயிராதவர்களுடைய குமாரர்களும் சந்ததியார்களும் விவசாயிகளாகாரென்பது.

6. யாதொரு மருமக்கத்தாயம் அல்லது அலிய சந்தானத் தரவாடு அல்லது தாவழியாயிராமல், 3 (ii) பிரிவின் தாத்பரியப்படி "விவசாயி" யாயிருக்கும் வேறே யாதொரு அவிபக்த ஹிந்து குடும்பத்திலே, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எவராகிலும் விவசாயியாயிராவிட்டால் அப்போது, 3 (ii) பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதக மில்லாமலே, ஆண் வழியில் அவருடைய குமாரர்கள், சந்ததியார்கள் ஆகிய இவர்களில் எவரும் இந்த ஆக்டின் **7** முதல் **12** வரையிலுள்ள பிரிவுகளின் காரியங்களுக்காகவும் **19** முதல் **27** வரையிலுள்ள பிரிவுகளின் காரியங்களுக்காகவும் விவசாயியாகக் கருதப்படமாட்டார்.

2-ம் அத்தியாயம்.

கடன்களைக் குறைப்பதும் இனிமேல் வாங்கவேண்டிய வீதமும்.

விவசாயிகளால் செலுத்தப்படத்தக்க கடன்களைக் குறைக்க வேண்டுமென்பது.

7. இதற்கு விரோதமாய் யாதொரு சட்டமாவது, வழக்கமாவது, ஒப்பந்தமாவது, கோர்ட் டிக்ரியாவது ஏற்பட்டிருந்த போதிலும் பாதகமில்லாமலே, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் யாதொரு விவசாயியால் செலுத்தப்படத் தக்க சகல கடன்களையும் இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்துக் குறைக்கவேண்டும்.

அந்தப் பிரகாரம் குறைக்கப்பட்ட படியுள்ள தொகைக்கு மேற்பட்ட எந்தத் தொகையும், அவரிடமிருந்தாவது அவருக்குச் சொந்தமான யாதொரு நிலத்திலிருந்தாவது நிலத்திலுள்ள பாத்தியதையிலிருந்தாவது வசூலிக்கப்படத் தக்கதாகமாட்டாது; மேலும், அவருக்கு விரோதமாகப் பிறப்பிக்கப்பட்ட யாதொரு டிக்ரியானது இந்த அத்தியாயத்தின் பிரகாரம் குறைக்கப்பட்டபடியுள்ள தொகைக்கு மேற்பட்ட ஒரு தொகைக்குச் சம்பந்தப்படுகிற வரையில், அந்த டிக்ரியை நிறைவேற்றுவதில் அவருடைய சொத்து ஜப்தி பண்ணி விற்பனை செய்யப் படுவதற்காவது அதுவிஷயமாய் எந்தவிதமாக வாகிலும் நடவடிக்கை நடத்தப்படுவதற்காவது உள்ளாகமாட்டாது.

குறிப்பு

இது மிகவும் முக்கியமான செக்ஷனாகும். இதைத் தழுவித்தான் செக்ஷன்கள் 8 முதல் 14 வரையில் இருக்கின்றன. இதன்படி 8, 9 செக்ஷன்களில் கண்ட மாதிரி ஏற்படுத்தப்பட்ட தொகைகளுக்குமேல் கொடுக்கவேண்டியதில்லை. 1-10-1937-ல் கடன்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு தற்காலிக

மான பரிகாரம் அளிப்பதற்காக நிபந்தனை ஏற்படுத்துவதற்கான மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டது. அதை அநேகர்கள் ஆக்ஷேபித்ததினால் தற்காலிகமாக உள்ளது சரியல்லவென்று உடனே பரிகாரம் கொடுக்கும்படியான இந்த சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் தற்காலீகமான சட்டம் 1-10-1937-ல் வந்த பிறகு சில கடன் பட்டவர்கள் ~~அவர்களுக்கு~~ கடன் கொடுக்க வேண்டியவர்களை ஏமாற்ற அவர்கள் சொத்துக்களை பராதீனம் செய்திருப்பது சரியல்லவென்று இந்த ஆக்ட் 24-வது செக்ஷன்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 24-வது செக்ஷனைப் பார்க்கவும். மொத்த ஆக்டையும், 4, 10, 16 செக்ஷன்களுக்கு உட்படுத்தி வாசிக்கவேண்டும். 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் அல்லது அதற்கு பின்னிட்டு செய்யப்பட்ட தாவாக்களுக்கு எம்மாதிரி செலவு கொடுக்கப்படவேண்டு மென்பதை 18-வது செக்ஷனிலும், முதலிலிருந்து இதுவரையில் செய்திருக்கும் டிக்கிரிகளை இந்த ஆக்டின்படி எம்மாதிரி திருத்த வேண்டுமென்பதை 19-வது செக்ஷனிலும் சட்டம் அமுலுக்கு வந்த உடன் நிறைவேற்றப்பட்டு வருகிற டிக்கிரிகளின் விஷயங்களில் அவைகளை நிறுத்தி டிக்கிரிகளை நிறுத்துதலைக்குறித்து 20-வது செக்ஷனிலும், இன்சால்வென்ஸியைக் குறித்து 21-வது செக்ஷனிலும், மேலேகண்டபடி நிறைவேற்றுவதில் ஜங்கம சொத்துக்களை விற்றிருந்தால் அதன் பரிகாரத்தைக் குறித்து 22-வது செக்ஷனிலும், ஸ்தாவர சொத்துக்களை விற்றிருந்தால் அதற்கு பரிகாரத்தை குறித்து 23-வது செக்ஷனிலும், நிறைவேற்றும் விஷயங்களில் ஏல விற்பனையை ரத்து செய்யும் விஷயங்களில் பரிகாரங்களைக் குறித்து 24-வது செக்ஷனிலும் கண்டிருக்கிறது. அவைகளைப் பார்க்கவும்.

1932-ம்வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்குமுன் ஏற்பட்ட கடன்களுக்காக நிபந்தனை.

8. 1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்கு முன் ஏற்பட்ட கடன்களை இதன் கீழ்ச் சொல்லியிருக்கும் விதமாகக் குறைக்க வேண்டும்; அதாவது :—

(1) யாதொரு விவசாயிக்குக் கடன் கொடுத்த யாதொரு நபருக்கு 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதியன்று செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கும் வட்டி சட்டத்தின்படியாவது வழக்கத்தின்படியாவது ஒப்பந்தத்தின்படியாவது செலுத்தப் படத்தக்கதா யிருந்தாலுஞ் சரி, கோர்ட்டாரின் யாதொரு டிக்ரியின்படிச் செலுத்தப்படத்தக்கதாயிருந்தாலுஞ் சரி, கடன் அல்லது இதர பொறுப்பு விஷயமாய் டிக்ரி பிறப்பிக்கப்பட்டிருந்தாலுஞ் சரி, இரா விட்டாலுஞ் சரி, அப்படிப்பட்ட சகல வட்டியும் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்; மேலும், அசல் தொகையாவது அதில் செலுத்தப்படாமல் பாக்கி யிருக்கக்கூடிய பாகமாவது மாத்திரமே மேற்படி தேதியன்று அந்த விவசாயியால் திருப்பிச் செலுத்தப்படத் தக்க தொகையாகக் கருதப்படும்.

(2) யாதொரு விவசாயி அசலைப்போல் இரண்டு மடங்குள்ள தொகையை அசலாகவோ வட்டியாகவோ இவ் விரண்டுமாகவோ யாதொரு கடன்காரருக்குச் செலுத்தியிருந்தால், அசல் உட்பட அந்தக் கடன் முற்றிலும் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(3) அசலாகவோ வட்டியாகவோ இவ்விரண்டுமாகவோ திருப்பிச் செலுத்தப்பட்ட தொகைகள் அசலைப்போல் இரண்டு மடங்குள்ள தொகைக்குக் குறைவா யிருந்தால், இந்தக்குறைவைப் பூர்த்தி செய்யும் தொகை மாத்திரம் அல்லது அசல் தொகை அல்லது அசல் தொகையில் செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கும் பாகம் ஆகிய இவைகளில் எது குறைவாயிருக்கிறதோ அது திருப்பிச் செலுத்தப் படத் தக்கதாகும்.

(4) 21 முதல் 24 வரையிலுள்ள பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக் குட்பட்டு, கடன்காரருக்குச் செலுத்தப் பட்டிருக்கும் யாதொரு தொகையை அவர் திருப்பிக் கொடுத்துவிட வேண்டு மென்பதாக அல்லது இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டிராவிட்டால் யாதொரு கடனுளியால் செலுத்தப்படத் தக்கதாயிருந்திருக்கும் தொகைக்கு மேற்பட்டுள்ள ஒரு தொகையைச் செலுத்துவதற்கு. அவருக்குள்ள பொறுப்பு அதிகப்படுத்தப்படுவதாக (1),(2),(3) உட்பிரிவுகளில் கண்டதெதனுலும் கருதப்படமாட்டாது.

விவரணம்:—யாதொரு கடனுவது அதே கடன்காரருக்குச் சாதகமாகப் புதுப்பிக்கப்பட்டாலும் ஒரு புதிய தஸ்தவேஜில் சேர்க்கப்பட்டாலும்,கடன்காரர் பிரதமத்தில் கொடுத்த அசல் தொகையும் பிற்பட்டு அசலாகக் கொடுக்கப்பட்டிருக்கும் தொகைகள் எவையேனும் இருந்தால் அந்தத்தொகைகளும் மாத்திரமே விவசாயி இந்தப் பிரிவின்படித் திருப்பிச் செலுத்தத்தக்க அசல் தொகையாகக் கருதப்படும்.

குறிப்பு

முக்கியமாக 1932ஹு அக்டோபர்மீ 1வ-க்கு முன் பட்ட கடனுக்கு யாதொரு வட்டியும் கொடுக்கவேண்டியதில்லை. எதாவது 1-10-37-க்குள் வட்டிக்கு அல்லது அசலுக்கு கொடுத்திருந்தால் அந்தத் தொகை அசல் தொகைக்கு மேல் அதிகரிக்காவிட்டால் அதிலிருந்து யாதொன்றும் கடன் கொடுத்த வேண்டியவர்களுக்கு திருப்பிக் கொடுக்கவேண்டியதில்லை. அந்தத் தொகையை வட்டிக்குக் கொடுத்ததாக எண்ணப்படும்.

(2) அம்மாதிரி கொடுத்தத் தொகை அசலுக்கு இரட்டிப்பாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கும் பக்ஷத்தில் யாதொரு தொகையும் (அசல் வட்டி) கொடுக்கவேண்டியதில்லை. பூரா பாக்கியும் பைசல் செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

(3) அப்படி கொடுத்த தொகை இரண்டு பங்குக்குக் குறைவாக இருக்கும் பக்ஷத்தில் குறைந்த தொகையை மாத்திரம் அசலுக்காகக் கொடுக்கவேண்டும். உதாரணமாக 1932ஸூ திற்கு முந்தி ஒருவர் ரூபாய் 100 கடன் வாங்கி இருந்தால், அதற்காக யாதொரு வட்டியும் கொடுக்காவிட்டால் வட்டி கொடுக்க வேண்டியதில்லை. வட்டிக்கு கொடுத்த தொகையை அசல் அவ்வளவு அல்லது அசலுக்கு குறைவாயிருந்தால் வட்டிக்கு கொடுத்ததாக கருதப்படும். அசல் தொகை அதாவது ரூபாய் 100-க்கு மேலும், அதன் இரட்டிப்பு தொகையாகிய ரூபாய் 200-க்கு குறைவாக கொடுத்திருந்தால் இரட்டிப்பு தொகைக்கும் கொடுத்திருக்கும் தொகைக்கும் உள்ள வித்தியாசத்தை கொடுத்தால் போதுமானது.

1937-ம் வருஷம் அக்டோபர்மாதம் முதல் தேதிக்கு பின்னிட்டு கடன் மனுக்காக டிக்கிரிகளை நிறைவேற்றும் பக்ஷத்தில், கடன்காரர்களுக்கு உண்டான நஷ்டங்களை கட்டிக்கொடுக்க செக்ஷன்கள் 22 முதல் 24 வரையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளைப் பார்க்கவும். 8-வது செக்ஷனை 10 செக்ஷனுக்கு உட்படுத்தி படிக்கவேண்டும்.

இந்த செக்ஷன்படிக்கு வட்டியை யார் குறைத்து தீர்ப்பு செய்யக்கூடியவர்கள் என்பதை 12-வது செக்ஷன்கீழ் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. செக்ஷன்படி தீர்மானிக்கப்பட்ட தொகைக்கு 12-வது செக்ஷன்படிக்கு இந்த ஆக்ட் அமுலுக்கு வந்த நாள் முதல் மாதம் 1-க்கு ரூபாய் 1-க்கு 1 பைக்கு மேல் வட்டி யிருக்கக்கூடாது.

1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதியன்றுவது அதற்குப்பிறகாவது ஏற்பட்ட கடன்களுக்காக நிபந்தனை.

9. 1932-ம் வருஷம் அக்டோபர் 1-ந் தேதியன்றுவது அதற்குப் பிறகாவது ஏற்பட்ட கடன்களை இதன் கீழ்ச் சொல்லி யிருக்கும் விதமாகக் குறைக்கவேண்டும்; அதாவது:

(1) மேற்படி கடன் எந்தச் சட்டம் வழக்கம், ஒப்பந்தம்

அல்லது கோர்ட் டிக்ரியின்படி ஏற்படுகிறதோ அந்தச் சட்டம் முதலியவைகளின் பிரகாரம் அந்தக் கடனுக்குப் பிரயோகப்படத்தக்க வீதம், அல்லது வருஷமொன்றுக்குச் சாதாரண வட்டி ஐந்து சதவீதம் ஆகிய இவைகளில் எது குறைவாயிருக்கிறதோ அந்த வீதப்படி இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதி வரையில் வட்டி கணக்கிடப்படும்; வட்டிக்காக செலுத்தப்பட்ட துகைகளுக்கு வரவு கொடுக்கவேண்டும். அசலுக்காகவும் மேற்படி வீதப்படிக் கணக்கிடப்படும் வட்டிக்காகவும் பாக்கி யிருப்பதாகக் காணப்படும் தொகையும் அசலேயும் அல்லது செலுத்த வேண்டிய அதின் பகுதியும் மாத்திரமே செலுத்தப்படத்தக்கதாகக் கருதப்படும்.

ஆனல், மேற்படி கடனில் எந்தப் பாகமாவது முந்திய கடன் எதையாகிலும் புதுப்பித்ததனல் ஏற்பட்டதாகத் தெரியவந்தால் அந்தப்படிப் புதுப்பிக்கப்பட்ட அந்தப் பாகமானது மேற்படி முந்திய கடன் ஏற்பட்ட தேதியன்று வாங்கப்பட்ட கடனகக் கருதப்படும்; அந்தக் கடனனது 1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்குமுன் வாங்கப்பட்டிருந்தால் 8-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளின்படி அது விஷயமாய் நடவடிக்கை நடத்தப்படும்.

(2) 22 முதல் 25 வரையிலுள்ள பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, கடன்காரருக்குச் செலுத்தப்பட்டிருக்கும் யாதொரு தொகையை அவர் திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென்பதாக, அல்லது இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டிராவிட்டால் கடனளியால் செலுத்தப்படத்தக்கதாயிருந்திருக்கும் தொகைக்கு மேற்பட்டுள்ள ஒரு தொகையைச் செலுத்துவதற்கு அவருக்குள்ள பொறுப்பு அதிகப்

படுத்துவதாக இதில் கண்டதெதனுலும் கருதப்பட மாட்டாது.

குறிப்பு

1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந்தேதிக்கு பின்னிட்டு ஏற்பட்ட கடனுக்கு 15-3-1938 வரையில் வருஷம் 1-க்கு 5 வட்டி அல்லது 5 வட்டிக்கு அதாவது மாதம் 1-க்கு 100-க்கு 6 அணு 8 பைக்குமேல் வட்டியிருந்தால் (அதாவது ரூபாய் 5-க்கு மாதம் 1-க்கு 4 தம்பிடி.) உட்பட்டிருந்தால் பூரா வட்டியும் கொடுத்துவிடவேண்டும். 5 வட்டிக்கு மேற்பட்டிருந்தால் 5 வட்டிக்குமேல் கொடுக்க வேண்டியதில்லை. வட்டித் தொகை கணக்கிடுவதில் 1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதியிலிருந்து இந்தச் சட்டம் செலவாணியாக தொடங்கிய 15-3-1938 வரையில் கொடுக்கப்பட்ட மொத்தத் தொகையும் கணக்கிட்டு அந்தத் தொகையானது குறித்த காலத்திற்கு 5 வட்டிக்கு மேலிருந்தால் அதிகமான தொகையை அசலுக்கு செல்லு வைத்துக்கொள்ளவேண்டியது. 5 வட்டிக்கு உட்பட்டிருந்தால் பூரா வட்டியும் கொடுத்தாகவேண்டும். ஆனல் மேற்படி கடனது 1-10-1932-க்கு முந்தியதாக இருந்து அந்த கடனுக்காக 1-10-1932-க்கு பிறகு எழுதிக்கொடுத்திருந்தால் அந்த கடனை 1-10-1932-க்கு முந்தியுள்ள கடனுக் கருதப்படும். அதற்கு 8-வது செக்ஷன்படி யாதொரு வட்டியும் கொடுக்க வேண்டியதில்லை. வட்டியை யார் குறைத்து தீர்ப்பு செய்யக்கூடியவர்கள் என்பது 12-வது செக்ஷன் கீழ் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. தீர்மானிக்கப்பட்ட தொகைக்கு 12-வது செக்ஷன்படிக்கு இந்த ஆக்ட் அமுலுக்கு வந்த நாள் முதல் மாதம் 1-க்கு ரூபாய்க்கு 1-பைக்குமேல், வட்டியிருக்கக்கூடாது.

10. விலக்குகள். (1) யாதொரு நபர் (3) (ii) பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள ஒரு விவசாயியாயிருந்தபோதிலும், அந்தப் பிரிவில் குறிப்பிட்டிருக்கிறபடி 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1 தேதியன்று யாதொரு

நிலத்தில் பாத்தியதையில்லாதவராயிருந்தாலும், அந்த நிலத்தின் குத்தகையாவது கீழ்க்குத்தகை யாவது பெற்றிராவிட்டாலும் அவருக்கு 8-வது, 9-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகள் பிரயோகப் படமாட்டா.

(2) (i) எந்தக் கொதுவையின்படி, கொதுவை வைக்கப்பட்ட சொத்தானது கொதுவை வைத்துக் கொண்டவரின் சுவாதீனத்திலிருந்து, கொதுவை வைத்துக்கொண்டவருக்குச் சேரவேண்டியதாக வட்டி வீதம் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்க வில்லையோ அப்படிப்பட்ட யாதொரு கொதுவைக் காவது ;

(ii) சொத்தை மாற்றுவதற்கான ஆக்ட் 55 (4) பிரிவின் கீழ் உண்டாக்கப்பட்ட எந்த தொகைக் காவது ;

(iii) 1913-ம் வருஷத்திய இந்து தேச கம்பெனி களைக் குறித்த ஆக்டின்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்ட எந்த பொது கம்பெனிக்கும், 1934-ம் வருஷத்திய இந்திய ரிசர்வ் பாங்க் ஆக்ட் 2 (*e*) பிரிவில் விவரிக்கப் பட்டிருக்கிற எந்த ஷெட்யூல் பாங்கிக்கும் சேர வேண்டிய எந்த தொகையும், வருஷமொன்றுக்கு 9 சத வீதத்திற்கு மேற்படாத வீதப்படி வட்டி இருந்தால் ;

8-வது, 9வ-து பிரிவுகளில் கண்டதெதனுலும் பாதகமுண்டாகமாட்டாது.

சில விஷயங்களில் செலவு முதலியவை களைப்பற்றிய நிபந்தனை.

11. யாதொரு விவசாயியால் செலுத்தப் படத்தக்க கடனில், யாதொரு கோர்ட்டாரால் செலவுகளாக டிக்ரி செய்யப்பட்ட யாதொரு தொகையாகிலும் கொதுவை வைக்கப்பட்ட சொத்தைக் காப்பாற்றும் பொருட்டு

கொதுவை வைத்துக் கொண்டவராலாவது இதர நபராலாவது நியாயமாய்ச் செலவு செய்யப்பட்ட தொகைகளாகிலும் அடங்கியிருந்தால், மேற்படி தொகை அல்லது தொகைகள் 8, 9-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளின்படி வசூலிக்கப்படத் தக்க தொகையுடன் கூட வசூலிக்கப்படத்தக்கவையாகும்.

பழைய கடன்களுக்கு விவசாயிகளால் செலுத்தப்படத்தக்க வட்டி வீதம்.

12. இந்த ஆக்டில் கண்ட நியந்தனைகளின் படிக் குறைக்கப்பட்டிருக்கும் சகல கடன்களுக்கும், அவை களின்படி எந்தத் தொகையாகிலும் செலுத்தப்படத் தக்கதாயிருக்கிற வரையில், மேற்படி கடன்கள் குறைக்கப்பட்டிருக்கும் தேதி யன்று சேரவேண்டிய அசல் தொகையின்மேல் சட்டத்தின்படியோ வழக்கத்தின்படியோ ஒப்பந்தத்தின்படியோ மற்றப்படியோ ஏற்கெனவே பிரயோகப்படத்தக்கதாயிருந்த வீதப்படி மேலேகண்ட தேதியிலிருந்து வட்டி வாங்கப்படவேண்டும் :

ஆனல் அது எந்த விஷயத்திலும் வருஷமொன்றுக்கு $6\frac{1}{4}$ சத வீதப்படியுள்ள சாதாரண வட்டிக்கு, அதாவது, மாதமொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு தம்பிடி வீதப்படியுள்ள சாதாரண வட்டிக்கு அல்லது வருஷமொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு அணு வீதப்படியுள்ள சாதாரண வட்டிக்கு மேற்படக் கூடாது.

குறிப்பு

இந்த ஆக்டின்படிக்கு எந்த அதிகாரிகள் வட்டியை குறைக்கலாமென்று ஏற்படுத்தாவிட்டாலும் சாமான்யமாக ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 9-வது செக்ஷன்படி அந்த அதிகாரம் கடன் ரூபாய் 3000-க்குள்ளிருந்தால் டிஸ்டிரிக்ட்

முன்ஸீபிற்கும் அதற்குமேலிருந்தால் சப்-கோர்ட்டிற்கும், ஜில்லா கோர்ட்டிற்கும் தீர்ப்பு செய்ய அதிகாரம் உண்டு. மதருஸ் கவர்ன்மெண்டார் 28-வது செக்ஷன்படி இந்த ஆக்டிற்கு வேண்டிய விதிகள் செய்ய அதிகாரமுடையவர்கள் அவர்கள் வேண்டுமென்றால் ஸிவில் கோர்ட்டிற்கு பதிலாக மதருஸ் 1936-வது வருஷத்திய 11-வது ஆக்ட் (Debt Conciliation Boards) அதாவது விவசாயிகளை கடனிலிருந்து நிவர்த்திக்க ஏற்படுத்தும் கடன் நிவாரணை போர்டுகள் ஆக்ட் 3-வது செக்ஷன்படி மதருஸ் கவர்ன்மெண்டரால் ஏற்படுத்திய போர்டாகவும் இருக்கலாம். வட்டி குறைக்கும் விஷயமாக போடும் மனுவை கடன் கொடுத்தவர்களும், கடன் வாங்கியவர்களும் போடலாமென்று ஏற்படுகிறது. 9-வது செக்ஷனில் கண்டபடிக்கு இந்த ஆக்ட் அமுலுக்கு வந்த தேதி அதாவது 15-3-38 முதல் வருஷம் 1-க்கு 100-க்கு 6¼ வட்டிக்குமேல் இருக்கக் கூடாது. அதாவது, மாதம் 1-க்கு ரூபாய் 1-க்கு 1 தம்பிடி (பை)-க்குமேல் கூடாது. அதாவது வருஷம் 1-க்கு ரூபாய் 1-க்கு அணு 1-க்குமேல் இருக்கக்கூடாது.

புதிய கடன்களுக்கு விவசாயிகளால் செலுத்தப்படத்தக்க வட்டி வீதம்.

13. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கிய பிறகு யாதொரு விவசாயிக்கு ஏற்பட்ட எந்த கடனுக்கும், கடனை வசூலிக்க நடத்தப்படும் நடவடிக்கையில், சாதாரண வட்டி வருஷமொன்றுக்கு 6¼ சத வீதத்துக்கு அல்லது மாதமொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு தம்படி வீதத்துக்கு அல்லது வருஷமொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு அணு வீதத்துக்கு மேற்பட்ட வீதப்படி, கோர்ட், வட்டியை குறைக்க வேண்டும்.

ஆனல், மாகாண கவர்ன்மெண்டார் ஸர்க்கார் கஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய்

அப்போதைக்கப்போது மாற்றி வேறே எந்த வட்டி வீதத்தையாகிலும் நிஷ்கரிஷை செய்யலாம்.

விவரணம் :—இந்த பிரிவின் காரியங்களுக்காக 3 (ii) பிரிவில் "விவசாயி" என்பதற்கு சொல்லியிருக்கும் அர்த்தத்தை வாசிக்கையில்,

(i) அந்த செக்ஷனில் (A) விலக்கு நிபந்தனையில் சொல்லியிருக்கும் "1938-ம் வருஷம் மார்ச் மாதம் 31 தேதியோடு முடிவாகும் இரண்டு அரசிறை வருஷம்" என்பதற்கு "கடன்பட்ட தேதிக்குமுன் மார்ச் மாதம் 31 தேதியோடு முடிவாகும் அடுத்து தேதியுள்ள இரண்டு அரசிறை வருஷங்கள்" என்று அமைத்துக்கொள்ள வேண்டும்; மேலும்

(ii) அந்த செக்ஷனில் (B) (C) விலக்கு நிபந்தனையில் சொல்லியிருக்கும் "1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1 தேதிக்கு அடுத்து முந்தியுள்ள இரண்டு வருஷங்கள்" என்பதற்கு "கடன்பட்ட தேதிக்குமுன்பு மார்ச் மாதம் 31 தேதி, அல்லது செப்டம்பர் மாதம் 30 தேதி (எது கடைசியோ) அதற்கு அடுத்து முந்தியுள்ள இரண்டு வருஷங்கள்" என்று அமைத்துக்கொள்ளவேண்டும்.

குறித்த சில விஷயங்களில் கடன் பாகத்தைப் பிரித்துவிடுவது.

14. 3 (ii) பிரிவில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலும் 5-வது, 6-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், விபத்தமாகவோ அவிபக்தமாகவோவுள்ள யாதொரு ஹிந்து குடும்பத்திலே ஒரு குடும்பக்கடன் விஷயமாய்ப் பொறுப்புள்ளவர்களில் சிலர் விவசாயிகளல்லாதவர்களாகவும் மற்றவர்கள் விவசாயிகளாகவும் இருக்கிறபட்சத்திலே, கடன்காரர், இதற்கு விரோதமாக எந்தச்

சட்டமாவது ஏற்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே,—

(*a*) விவசாயியல்லாதவர் அல்லது அல்லாதவர்கள்மேலும் குடும்பச்சொத்தில் அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகத்தின்மேலும், மேற்படி கடனில் வீதாசாரப்படி அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகம் சம்பந்தமாய் மாத்திரம் நடவடிக்கை நடத்த பாத்தியதையுள்ளவராவர். மேலும்,

(*b*) விவசாயியாயிருப்பவர் அல்லது இருப்பவர்கள் மேலும் குடும்பச்சொத்தில் அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகத்தின்மேலும், மேற்படி கடனில் வீதாசாரப்படி அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகம் சம்பந்தமாய் மாத்திரம் நடவடிக்கை நடத்த பாத்தியதை யுள்ளவராவார்; அந்த பாகமானது இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் குறைக்கப்படவேண்டும்.

III-ம் அத்தியாயம்.

குத்தகைத் தோகை பாக்கிகள்

நிலத்துக்குடையவர்கள் முதலியவர்களுக்குச் சேரவேண்டிய குத்தகைத் தோகை பாக்கிகள் திட்டத்துக்குப்பட்டுத் தீர்க்கப்படுவது.

15. (1) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டின்படி யாதொரு நிலத்துக்குடையவர் அல்லது கீழ்க்குத்தகைதாரருக்காவது மனையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக்குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டின்படி யாதொரு ஜன்மி அல்லது இடையிலுள்ளவருக்காவது யாதொரு விவசாயியால் செலுத்-

தப்படத்தக்கதாயிருப்பதும், 1345-ம் பசலி வருஷத்துக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் சேர்ந்துவந்திருப்பதும் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியன்று செலுத்தப்படாமல் பாக்கியாயிருப்பதுமான குத்தகைத் தொகையானது குத்தகைத் தொகையாகவே சேரவேண்டியதாயிருந்தாலுஞ்சரி, அதற்காக டிக்ரி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலுஞ்சரி, அப்படிப்பட்ட சகலகுத்தகைத் தொகையும் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் :

ஆனல், குத்தகைத் தொகை செலுத்துவதற்குள்ளான (இந்தப் பிரிவில் பின்னல் "பாயக்காரி" என்று குறிப்பிடப்படும்) நபர் யாதொரு கைப்பற்று நிலம் சம்பந்தமாக 1346-வது, 1347-வது பசலிகளுக்குச் சேர்ந்து வந்திருக்கும் சகல குத்தகைத் தொகை பாக்கிகளேயும் 1939-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 30-ந் தேதி யன்றைக்காவது அதற்கு முன்பாவது செலுத்தாவிட்டால், 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் சம்பந்தப்பட்டவைகளாய், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியன்று அதே கைப்பற்று நிலம் விஷயமாய்ச் செலுத்தப்படாமலிருக்கும் குத்தகைத் தொகை பாக்கிகள் 1346-வது 1347-வது பசலிகளுக்குச் சேரவேண்டிய குத்தகைத் தொகையில் ரயத்தினலாகிலும் பாயக்காரியின லாகிலும் செலுத்தப்படும் பாகமானது அந்த இரண்டு பசலிகளுக்குச் சேரவேண்டிய குத்தகைத் தொகையில் என்ன சங்கியா பரிமாணமுள்ளதா யிருக்கிறதோ அதே சங்கியா பரிமாணப்படி மாத்திரமே கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் :

மேலும், யாதொரு பாயக்காரி மேற்படி கைப்பற்று நிலம் சம்பந்தமாய் 1347-ம் பசலிக்காகச்

செலுத்தவேண்டிய குத்தகைத் தொகையை 1938-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 30-ந் தேதியன்ருவது அதற்கு முன்பாவது செலுத்தி யிருந்தாலன்றி மற்றப்படி, அவர் இந்தப் பிரிவின்படிக்கான நன்மையை அடைய பாத்தியதை யுடையவராகமாட்டார்.

விவரணம்.—மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டின்படி ஒழுங்கேற்படுத்தப்படும் விஷயங்களில், இந்த அத்தியாயத்தில் எந்தப் பசலி வருஷத்துக்காகிலும் சம்பந்தப்பட்ட யாதொரு உதகரிப்பானது, மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்டதாய், அந்தப் பசலி வருஷத்தின் பெரும்பாகம் அடங்கியுள்ள விவசாய வருஷத்துக்குச் சம்பந்தப்பட்ட உதகரிப்பாகக் கருதப்படும்.

உதாரணங்கள்.—(*a*) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் ஒரு ரயத்தாவது பாயக்காரியாவது குறித்த யாதொரு கைப்பற்று நிலம் சம்பந்தமாய் 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் உரிய குத்தகைத் தொகை விஷயமாய் 500 ரூபாயும் அந்தத் தேதியன்று அதே கைப்பற்று நிலத்துக்காக 1346-வது, 1347-வது பசலிகளுக்குரிய குத்தகைத் தொகை விஷயமாய் இந்தப் பசலி ஒவ்வொன்றுக்குமுரிய குத்தகைத் தொகையாகிய 100 ரூபாயும் பாக்கியாக இருக்கிருர். 1938-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் 1347-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை அவர் செலுத்துகிருர்; 1939-ம் வருஷம் ஸெப்டெம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் 1346-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை அவர் செலுத்துகிருர். இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் செலுத்தப்படாமலிருந்த 500 ரூபாயுள்ள

குத்தகைத் தொகை பாக்கி கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(b) குறித்த யாதொரு கைப்பற்று நிலத்தின் விஷயமாய் 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் உரிய குத்தகைத் தொகை பாக்கிகளை குறிக்கும் 500 ரூபாயுள்ள தொகையும், அந்தக்கைப்பற்று நிலத்துக்காக 1346-வது, 1347-வது பசலிகளுக்குரிய குத்தகைத் தொகைகளும் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கின்றன ; ஒவ்வொரு பசலிக்கும் உரிய குத்தகைத் தொகை 100 ரூபாய் ரயத்து அல்லது பாயக்காரி 1938-ம் வருஷம் ஸெப்டெம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் 1347-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை நிலத்துக்குடையவருக்குச் செலுத்துகிறார் ; ஆனால் 1346-பசலிக்குரிய குத்தகைத் தொகையில் எந்தப் பாகத்தையும் 1939-ம் வருஷம் ஸெப்டெம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் செலுத்தத் தவறுகிறார். 250 ரூபாய் மாத்திரமே, அதாவது, 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்குமுரிய குத்தகைத் தொகையில் அரைப்பாகம் மாத்திரமே கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(c) அதே விஷயத்தில், ரயத்து அல்லது பாயக்காரி 1347-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகை முழுவதையும் 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் நிலத்துக் குடையவருக்குச் செலுத்தவில்லை. 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கு முரிய பாக்கிகளில் எந்தப் பாகமும் கொடுத்துத் தீர்க்கப்பட்டதாகாது ; இந்தப் பிரிவினாலுண்டாகும் நன்மைகளை ரயத்து இழந்துவிடுகிறார்.

(d) அதே விஷயத்தில், ரயத்து அல்லது பாயக்காரி ~~1751~~-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை

1347

1938-ம் வருஷம் ஸெப்டெம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் நிலத்துக் குடையவருக்குச் செலுத்துகிறார்; ஆனால், 1346-வது பசலிக்குரிய குத்தகைத் தொகையில் பாதியாகிய 50 ரூபாய் மாத்திரமே 1939-ம் வருஷம் ஸெப்டெம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் செலுத்துகிறார். 1346, 1347 ஆகிய இவ்விரண்டு பசலிகளுக்குரிய குத்தகைத் தொகையாகிய 200 ரூபாயில் 150 ரூபாயை இந்தப்படி 1939-ம் வருஷம் ஸெப்டெம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் அவர் செலுத்தியிருக்கிறார். 375 ரூபாய், அதாவது, 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்குமுரிய குத்தகைத் தொகையில் முக்கால் பாகம் கொடுத்துத் தீர்க்கப்பட் டிருப்பதாகக் கருதப்படும்.

(2) 1345-ம் பசலி வருஷத்தில் சேர்ந்துவந்திருக்கும் பாக்கி தொகையான குத்தகை தொகையை வசூலிக்கும் நடவடிக்கைகள், சட்டசபையின் சட்டப்படியாவது, கோர்ட் உத்திரவின்படியாவது நிறுத்தப்பட்டிருந்தாலும், அல்லது அம்மாதிரி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் நிறுத்தி வைக்கப்பட்டாலும், (1) வது உட்பிரிவில் கண்டதெதனாலும் குத்தகை தொகையை தீர்த்துவிட்டதாகக் கருதக்கூடாது. 1345-ம் பசலிக்குச் சேரவேண்டிய குத்தகை பாக்கி, 1938-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ந் தேதி வரைக்கும், அல்லது 1347-ம் பசலி பூராக்கி குத்தகை அந்த தேதிக்குமுன் செலுத்தப்பட்டிருந்தால், 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ந் தேதி வரைக்கும், வசூலிக்க முடியாது.

(3) எந்த ஒப்பந்தத்திலாவது பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்ட் 64-வது பிரிவிலாவது இதற்கு விரோதமாய் என்னசொல்லி யிருந்தபோதிலும்

பாதகமில்லாமலே, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கிய பிறகு யாதொரு பாயக்காரியால் குத்தகைக்காகச் செலுத்தப்படும் எந்தத்தொகையாகிலும் முதலில் 1347-வது பசலிக்காக அவர் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகைக்கும், அடுத்தபடியாக 1346-வது பசலிக்காக அவர் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகைக்கும் செல்லுவைக்கப்பட வேண்டுமேயொழிய முந்தி பசலிஎதற்காவது செலுத்தவேண்டிய குத்தகைத் தொகைக்கு செல்லு வைக்கப்படக்கூடாது.

(4) ஒவ்வொரு பாயக்காரியும் 1347-ம் பசலிக்காவது 1346-ம் பசலிக்காவது இவ்விரண்டு பசலிகளுக்குமாவது தாம் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகைக்காக எந்தத் தொகையாகிலும் கோர்ட்டில் செலுத்தலாம்; அதன்மேல் கோர்ட்டார் சந்தர்ப்பத்துக் கேற்றபடி நிலத்துக்குடையவர், கீழ்க்குத்தகைதாரர், ஜன்மி அல்லது இடையிலுள்ளவருக்கு நோடீஸ் கொடுத்து, இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளைப் பிரயோகித்து, அந்தப் பாயக்காரியானவர் மேற்சொன்ன பசலிகளுக்குரிய குத்தகைத் தொகை முழுவதையும் செலுத்தி யிருக்கிறாரா அல்லது அதில் ஒரு பாகத்தை மாத்திரம் செலுத்தி யிருக்கிராரூவென்பதையும், பின் சொல்லப்பட்ட விஷயத்தில் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி குத்தகைக்குத் தொகை சம்பந்தமாய் அந்தப் பாயக்காரிக்கு மிகுதியிருக்கும் பொறுப்பின் அளவு இவ்வளவென்பதையுங்கூட நிச்சயிக்கவேண்டும்.

விவரணம்.—இந்த உட்பிரிவின் காரியங்களுக்காக, "கோர்ட்டார்" என்பது சந்தர்ப்பத்துக்கேற்றபடி பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்ட் 209 (1) பிரிவில்

சொல்லியிருக்கும் கலெக்டர் என்ருவது மலையாளத் துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்ட் (b) பிரிவில் சொல்லியிருக்கும் கோர்ட்டார் என்ருவது அர்த்தமாகும்.

குறிப்பு

1347-வது பசலிக்கு, (அதாவது 1937 வருஷம் ஜூலை மாதம் 1 தேதி முதல் 1938 வருஷம் ஜூன் மாதம் 30 தேதி வரையில் உள்ள காலத்திற்கு) செலுத்த வேண்டிய குத்தகையை 1938 வருஷம் செப்டம்பர் மாதம் 30 தேதிக்குள் அல்லது அந்த தேதியில் பூராவும் செலுத்திவிட்டால் தான் இந்த செக்ஷனில் கண்ட பரிகாரங்கள் விவசாயிக ளுக்குக் கிடைக்கும். உதாரணம் (c)யை பார்க்கவும். ஒரு விவசாயி அம்மாதிரி செலுத்துவாருனல் அதற்கு முந்தியிருக்கும் அதாவது 1346-வது பசலிக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகை பூராவையும் 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30 தேதிக்குள் கொடுப்பாராகில் அதற்கு முந்தி 1345-ம் பசலிவரையில் செலுத்தவேண்டிய எல்லா குத்தகை கடன்களேயும், 16-வது செக்ஷன்களில் கண்ட நில தீர்வை தண்ணீர் ஸெஸ் சிலவுகள் தவிர, செலுத்தி விட்டதாக கருதப்படும். உதாரணம் (a)யை பார்க் கவும். ஒருவேளை 1347-ம் பசலிக்கு மட்டும் செலுத்தி 1346-ம் பசலித் தொகையை 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30 தேதிக்குள் செலுத்தாவிட்டால் 16-வது செக்ஷனில் காணப்பட்ட ஸெஸ்ஸுகள் செலவுகள் தவிற பாதி தொகை செலுத்தியதாக கருதப்பட்டு தான் செலுத்த வேண்டிய குத்தகையில் பாதி செலுத்த வேண் டியதாகும். உதாரணம் (b)யை பார்க்கவும். 1346-ம் பசலியில் ஏதாவது ஒரு பாகத்தை 1939-ம் வருஷம் செப் டம்பர் மாதம் 30 தேதிக்குள் கொடுத்திருந்தால் அந்த பாகாசாரம் பாயக்காரி செலுத்த வேண்டிய பாதி கடனில் பாகாசாரம் 16-வது செக்ஷன்களிலுள்ள ஸெஸுகள் செலவு கள் தவிற, தள்ளிக் கொடுக்கப்படும் உதாரணம் (d)யைப் பார்க்கவும். 1347-ம் பசலிக்கு 1938 வருஷம் செப்டம்பர்

மாதம் 30 தேதிக்குள் கட்டவேண்டியிருப்பதால் அதுவரையில் நிலத்துக்குடையவர் தாவாவாவது, ஜப்தியாவது செய்யக்கூடாது. பாயக்காரி அஜாக்கிரதையாயிருந்தால் கொடுக்கவேண்டியயாதொரு குத்தகைக் கடனும் தள்ளுகடையாகாது அதாவது பூராவும் கொடுத்தாகவேண்டும்.

1346-ம் பசலி கடனை 1939 வருஷம் செப்டம்பர் மாதம் 30 தேதிக்குள் கட்டவேண்டியிருப்பதால் நிலத்துக்குடையவர் அதுவரையில் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள முடியாது. பாயக்காரி அஜாக்கிறதையாயிருந்தால் கொடுக்கவேண்டிய யாதொரு கடனும் தள்ளுகடையாகாது. பூராவும் கொடுத்தாகவேண்டும். 1347-ம் பசலிக்கு 1938 வருஷம் செப்டம்பர் மாதம் 30 தேதிக்குள் குத்தகை பாக்கியை செலுத்தாவிட்டால், 1347, 1346, 1345 அதற்கு முன்னிருக்கும் யாதொரு பாக்கியையும் 1938 வருஷம் டிசம்பர் மாதம் 31 தேதிக்குப் பிறகு வசூலிக்க நிலத்துக்குடையவருக்கு அதிகாரம் உண்டு. அவர் அம்மாதிரி செய்யாவிட்டால் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படுவார். 1346-ம் பசலிக்கு 1939 வருஷம் செப்டம்பர் மாதம் 30 தேதிக்குள் குத்தகை பாக்கியில் கொஞ்சம் பாகம் செலுத்தியிருந்தால் 1345 பசலிக்கும் அதற்கு முன்னிருக்கும் பாக்கிக்கும் பாகாசாரம் செல்லுபடியாகுமாதலால் மிகுதி பாக்கியை நிலத்துக்குடையவர் 1939 வருஷம் டிசம்பர் மாதம் 31 தேதிக்குப் பிறகு வசூலிக்க அதிகாரம் உண்டு. அம்மாதிரி செய்யாவிட்டால் காலாவதி தோஷம் பாதிக்கும்.

இவ்விஷயத்தை விரிவாக 17-வது செக்ஷனில் காணலாம்.

நிலத்துக் குடையவர் லாண்ட் ஸேல் என்னும் வரியையும் செலவுகளையும் வசூலிக்கப் பாத்தியதை யுடையவராவா ரென்பது.

16. இந்த அத்தியாயத்தில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே, பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டின்படி யாதொரு நிலத்துக்குடையவர், அல்லது கீழ்க்குத்தகைதாரராவது, மலையா

ளத்து பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டின்படியாதொரு ஜென்மி அல்லது இடையிலுள்ளவராவது, 15-வது பிரிவின்படி தம் மால் வசூலிக்கப்படத்தக்க தொகைகள் கூட,

(*a*) 1920-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்து லோகல் போர்டுகளாக்ட் 88-வது பிரிவின்படி வசூ லிக்கப்படத் தக்க லாண்ட் ஸெஸ் என்னும் வரி ஏதா கிலும் தாம் செலுத்தி யிருந்தால்;

(*b*) சட்டம், வழக்கம், ஒப்பந்தம் அல்லது பாயக் கார பாத்தியதைப் பற்றிய கோர்ட் டிக்ரியின்படி நிலத்தீர்வை, தண்ணீர்வரி இவை மாகாண கவர்ன் மெண்டுக்கு செலுத்தி யிருந்தால்; மேலும்

(*c*) குத்தகைத் தொகைக்காகத் தாம் பெற்றிருக் கும் எந்த டிக்ரியிலாவது தமக்கு கொடுக்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் செலவுத் தொகைகளையும் வசூலிக்க பாத்தியதை யுடையவராவார்.

சில விஷயங்களில் குத்தகைத் தோகைக் கான வியாஜ்ஜியங்கள் முதலியவைகளின் கால வரையறையை அதிகப் படுத்துவது.

17. பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப் பற்றிய சென்னப் பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டிலாவது மலை யாளத்துப் பாயக்காரி பாத்தி யதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டிலாவது காலவரையறையைக் குறித் தாகிலும் நடவடிக்கை முறை யைக் குறித்தாகிலும் அந் தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் எந்தச் சட்டத்திலாவது என்ன சொல்லி யிருந்தபோ திலும் பாதகமில்லாமலே, 1345-வது பசலி அல்லது அதற்கு முந்திய யாதொரு பசலிக்குரியதாய்ச் சேர் ந்து வந்திருக்கும் குத்தகைத் தொகை பாக்கி சம்பந்த மான எந்த வியாஜ்ஜியத்துக்கு அல்லது (டிக்ரியை)

நிறை வேற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு இப்போதிருக்கும் சட்டப்படி இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதிலிருந்து 1938-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் தடை ஏற்படுமோ அப்படிப் பட்ட வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கைள் எதற்கும் அந்தப்படி தடை ஏற்படாது; மேலும், சந்தர்ப்பத் துக்கேற்றபடி நிலத்துக்குடையவர், கீழ்க்குத்தகை தாரர், ஜன்மி அல்லது இடையிலுள்ளவர் அவைகளை வசூலிப்பதற்காக 1938-ம் வருஷம் டிஸெம்பர் மாதம் 31-ந் தேதியன்ருகிலும் அதற்கு முந்தியாகிலும் வயாஜ்ஜியம் தொடரவோ (டிக்ரியை) நிறைவேற்று யுதற்கான நடவடிக்கைகள் நடத்தவோ பாத்தியதை யுடையவராவார்; 1347-வது பசலிக்காகச் செலுத்த விவண்டிய குத்தகைத் தொகையானது 1938-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குமுன் செலுத் தப்பட்டிருக்கும் விஷயங்களில் எவையேனும் குத்த கைத் தொகை பாக்கிகளை வசூலிப்பதற்கான எந்த வியாஜ்ஜியம் அல்லது (டிக்ரியை) நிறைவேற்றுவதற் கான நடவடிக்கைகளுக்கு இப்போதிருக்கும் சட்டப் படி, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதிலிருந்து 1939-ம் ஸெப்டம்ப ர்மாதம் 30-ந் தேதிக்குள் தடை ஏற்படுமோ அந்த வியாஜ்ஜியம் அல்லது நடவடிக் கைகளுக்குரிய காலவரை யறையானது 1939-ம் வருஷம் டிஸெம்பர் மாதம் 31-ந் தேதி வரையில் நீடித் திருக்கும் :

ஆனல், சந்தர்ப்பத்துக் கேற்றபடி 1938-ம் வருஷம் டிஸெம்பர் மாதம் 31-ந் தேதியன்ருகிலும் 1939-ம் வருஷம் டிஸெம்பர் மாதம் 31-ந் தேதியன்ருகிலும் 14-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படிக் கான யாதொரு விண்ணப்பம் எந்தக் கோர்ட்டிலாயினும் பைசலாகாமல் நடந்து கொண்டிருந்தால்,

இந்தப்பிரிவின்படி நிர்ணயிக்கபடும் கால வரையறை யானது அப்படிப்பட்ட விண்ணப்பத்தின்மேல் பிறப் பிக்கப்படும் உத்தரவின் தேதியிலிருந்து இரண்டு மாத கால அளவு கழிந்து போகிறவரையில் நீடித் திருக்கும்.

4-ம் அத்தியாயம்.

நடவடிக்கை முறையும் பலவகைப்பட்டவைகளும்.

சில விஷயங்களில் செலவுகளைப்பற்றிய நிப ந்தனை.

18. (1) 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் யன்றூவது அதற்குப் பிறகாவது தாக்கல் செய்யப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் யாதொரு விவசாயிக்கு விரோதமாய் ஒரு டிக்ரி பிறப்பிக்கப் பட்டிருந்தால், இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை அநுசரித்துக் குறைக்கப்பட்ட கடன் தொகைக்காக மேற்படி வியாஜ்ஜியம் தொடரப்பட்டிருந்தால் எவ்வளவு செலவுகள் அனுமதிக்கப்படத் தக்கவையாயிருந்திருக்குமோ அவ்வளவு செலவுகளை மாத்திரமே கோர்ட்டார் அனுமதிக்கவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தில் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன் டிக்ரி பிறப்பிக்கப்பட்டிருந்தால், மேற்படி விவசாயி விண்ணப்பம் செய்து கொள்வதன்மேல், கோர்ட்டார் அந்த டிக்ரியை அப்பிரகாரமே திருத்தவேண்டும்.

(2) 1938-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந் தேதிக்கு முன் கால வரையறையினல் தடுக்கப்படும் யாதொரு தாவா விஷயமாய், 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதியன்றூவது அந்தத் தேதிக்குப் பிறகும் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன்புமாவது தொடரப்படும் யாதொரு வியாஜ்ஜியத்துக்கு

(1) உட்பிரிவில் கண்டதெதுவும் பிரயோகப்படமாட்டாது.

சில டிகிரிகளை திருத்துவது.

19. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன் யாதொரு கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று யாதொரு கோர்ட்டார் ஒரு டிக்ரியைப் பிறப்பித்திருந்தால், அவர்கள் விவசாயியாயிருக்கும் யாதொரு தீர்ப்பான கடனாளி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை மேற்படி டிக்ரிக்குப் பிரயோகப்படுத்தவேண்டியதுமல்லாமல், 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, சந்தர்ப்பத்துக் கேற்றபடி மேற்படி டிக்ரியை அப்பிரகாரமே திருத்தவும் வேண்டும் அல்லது அது நிறைவேற்றப்பட்டதென்று எழுதவும் வேண்டும்.

ஆனல், அப்படிப்பட்ட யாதொரு டிக்ரி விஷயமாய், இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்கு முன்பாகிலுஞ் சரி செலுத்தப்பட்ட சகல தொகைகளையும் அல்லது வசூலிக்கப்பட்ட சகலதொகைகளையும் கடன்காரருக்குக் கொடுக்கவேண்டுமென்று பிரதமத்தில் டிக்ரி செய்யப்பட்ட சகலசெலவுகளையும் செலுத்துவதற்காக முதலிலே உபயோகிக்கவேண்டும்.

நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை நிறுத்திவைப்பது.

20. இந்த ஆக்டினலேற்படும் அனுகூலங்களை அடைய பாத்தியதையுள்ளவராயிருக்கும் யாதொரு நபருக்கு விரோதமாகப் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியை நிறைவேற்றும் ஒவ்வொரு கோர்ட்

டாரும், விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன் மேல், ஷை டிக்ரியைப் பிறப்பித்த கோர்ட்டார் 18-வது பிரிவின்படிச் செய்துக்கொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ளப்படப்போகும் யாதொரு விண்ணப்பத்தின்மேல் உத்தரவு பிறப்பிக்கிறவரையில் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவேண்டும்:

ஆனால், (நடவடிக்கைகளை) நிறுத்திவைக்கும்படிச் செய்துகொண்ட விண்ணப்பத்தில் கோரியபடி உத்தரவான பிறகு 60 தினத்துக்குள், தீர்ப்பான கடனாளி 19-வது பிரிவின் பிரகாரம் பரிகாரம் அளிக்கும்படி ஷை டிக்ரி பிறப்பித்த கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளாவிட்டாலும். மேலே கண்டபடி விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டு அது தள்ளிவிடப்பட்டிருந்தாலும், இந்த ஆக்டில் இதற்கு விரோதமாய் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, அந்த டிக்ரியை அது இருக்கிறபடியே நிறைவேற்றவேண்டும்.

விவரணம் :—"டிக்ரி பிறப்பித்த கோர்ட்டார்" என்னும் சொற்றொடர் 1908ம் ஹூ த்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தில் என்ன அர்த்தம் உள்ளதாயிருக்கிறதோ அதே அர்த்தம் உள்ளதாயிருக்கும்.

கடனிறுக்கச் சக்தியில்லையென்று தீர்மானிக்கும் விஷயங்கள்

21. கடனிறுக்க சக்தியற்றவரென்று யாதொரு நபர் தீர்மானிக்கப் பட்டிருந்து இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன் அவருடைய ஆஸ்தியிலிருந்து கொடுக்கப்படும் ஈவுத்தொகை பிரசித்தம் செய்யப்பட்டிருந்தால் அவரால் செலுத்தப்படத்தக்க கடன்களுக்கு இந்த ஆக்டில்

கண்டதெதுவும் பிரயோகப் படமாட்டாது. பங்கீடு தொகை பிரசித்தம் செய்யப்பட்டிருந்தால் கடனிறுக்க சக்தியற்றவரென்று தீர்மானிக்குமுன் இந்த ஆக்டின் கருத்துப்படி விவசாயியா யிருக்கும் யாதொரு நபர் கொடுக்கவேண்டிய கடன்களுக்கு இந்த ஆக்ட் பிரயோகப்படும்.

அசையும் பொருள் விற்பனை செய்யப்பட்ட சில விஷயங்களில் பிரத்தியேகமான நிபந்தனை.

22. யாதொரு டிக்ரியை நிறைவேற்றுகையில், யாதொரு விவசாயியின் அசையும் பொருள் எதுவாகிலும் 1937-ம் ஷை அக்டோபர் மீ 1உ யன்றாவது அதற்குப் பிறகாவது விற்பனை செய்யப்பட்டிருந்தால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி 8-வது அல்லது 9-வது 11-வது 12-வது பிரிவுகளிலும் கண்ட நிபந்தனைகளை ஷை டிக்ரிக்குப் பிரயோகப்படுத்தவெண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கும்படி தீர்ப்பான எந்தக் கடனாளியாகிலும் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்; விண்ணப்பதாரர் ஷை பிரிவுகளினாலேற்படும் அனுகூலங்களை அடையப் பாத்தியதையுள்ளவராயிருக்கும் விவசாயியென்று கோர்ட்டார் திருப்திகரமாகத் தெரிந்துகொண்டால், அவர்கள் அவைகளைப் பிரயோகப்படுத்தி, ஷை சொத்து விற்பனை செய்யப்படாதிருந்தால் டிக்ரி பெற்றவர் என்ன தொகை பெறுவதற்குப் பாத்தியதையுள்ளவராயிருந்திருப்பாரோ அந்தத் தொகைக்கு அதிகமாக 1937-ம் ஷை அக்டோபர் மீ 1உ யன்றாவது அதற்குப் பிறகாவது அவர் பெற்றுக் கொண்ட யாதொரு தொகையைத் திருப்பிக் கொடுத்து விடும்படி அவருக்கு உத்தரவு செய்ய வேண்டும்:

ஆனல், டிக்ரி பெற்றவருக்கு நோடிஸ் கொடுக்காமலும், இது விஷயத்தில் அவர் சொல்லிக்கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொள்ள அவருக்கு அவகர்சம் ஏற்படுத்திக் கொடுக்காமலும் அப்படிப்பட்ட எந்த உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாது.

அசையாப் பொருளின் விற்பனைகளைச் சிலவிஷயங்களில் ரத்து செய்ய வேண்டுமென்பது.

23. யாதொரு டிக்ரியை நிறைவேற்றுகையில், யாதொரு விவசாயி பாத்தியதை உள்ளவரா யிருந்த எந்த அசையாப் பொருளாகிலும் 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதியன்ருவது அதற்குப் பிறகாவது விற்பனை செய்யப்பட்டிருந்தால் அப்போது, 1908-ம் வருஷத்திய இந்து தேசத்துக் கால நிர்ணயச் சட்டத்திலாவது 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்திலாவது என்ன சொல்லி யிருந்தபோதிலும் பாதகமில்லாமலும், மேற்படி விற்பனை ஊர்ஜ்ஜிதப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பாதக மில்லாமலும், தாம் இந்த ஆக்டினலேற்படும் அனுகூலங்களை அடைய பாத்தியதையுள்ளவரா யிருக்கும் விவசாயியென்று சொல்லிக் கொள்ளும் தீர்ப்பான யாதொரு கடனளி மேற்படி சொத்தின் விற்பனையை ரத்து செய்யும்படி இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கியதிலிருந்து 90 தினத்துக்குள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; விண்ணப்பதாரர் இந்த ஆக்டினலேற்படும் அனுகூலங்களை அடைய பாத்தியதையுள்ளவரா யிருக்கும் விவசாயியென்று கோர்ட்டார் திருப்திகரமாகத் தெரிந்துகொண்டால், அவர்கள் மேற்படி விற்பனையை ரத்து செய்யும்படி உத்தரவு பண்ணவேண்டும்;

ஆனல், டிக்ரி பெற்றவர், ஏலக்கிரயதாரர், மேற்படி விற்பனையில் அக்கறையுள்ள இதர நபர்கள் ஆகிய இவர்களுக்கு நோடிஸ் கொடுக்காமலும் இது விஷயமாய் அவர்கள் சொல்லிக்கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொள்ள அவர்களுக்கு அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்காமலும் அப்படிப்பட்ட எந்த உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாது.

விற்பனையை ரத்து செய்வது காரணமாகப் பிரயோகப்பட வேண்டிய நிபந்தனை.

24. முந்திய பிரிவின்படி யாதொரு விற்பனை ரத்து செய்யப் பட்டால், யாதொரு கிரயதாரர் தம்மால் யாருக்கு யாதொரு கிரயத் தொகை கொடுக்கப் பட்டிருக்கிறதோ அந்த நபர் அந்தப் பணத்தைத் திருப்பிக்கொடுக்கும்படி, உத்தரவு பிறப்பிக்கப் பெறுவதற்கு பாத்தியதை யுள்ளவராவார் :

ஆனல், அப்படிப்பட்ட யாதொரு விற்பனை விஷயமாகத் தரகு எதுவும் செலுத்தப்படத்தக்கதாகமாட்டாது ; மேலும் தரகு வசூலிக்கப்பட்டிருந்தால், அதைத் திருப்பிக் கொடுத்துவிடும்படிக் கோர்ட்டார் கட்டளையிட வேண்டும்.

கடனாளி பராதீனம் செய்வது.

25. யாதொரு விவசாயிக் கடனாளி 1937-ம் வருஷம் அக்டோபர் மாசம் 1-தேதி யன்றாவது அதற்குப் பிறகாவது அசையாப் பொருளைப் பராதீனம் செய்த சகல விஷயங்களிலும் எந்தக் கடன்காரர் டிக்ரியை நிறைவேற்றுகையில் செய்த விற்பனையானது 22-வது பிரிவின்படி ரத்துசெய்யப்பட்டிருக்கிறதோ, அல்லது மேற்படி விற்பனைத் தொகையை வீதப்படிப்

பங்கிடு செய்யப் பெறுவதற்கு 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 73-வது பிரிவின்படி எந்தக் கடன்காரர் பாத்தியதையுள்ளவராய் விட்டாரோ அப்படிப்பட்ட ஒவ்வொரு கடன்காரர் விஷயத்தி லும் செலாவணியாகமாட்டா.

சில விஷயங்களைக் குறித்து டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் சங்கதி தெரி விக்க வேண்டுமென்பது.

26. எந்த ஜில்லாவில் தம்முடைய கடனாளி 3 (ii) பிரிவுடன் சேர்த்துள்ள (A) விலக்கு நிபந்தனையின் ஷரத் துகளை அனுசரித்து வரு மான வரியாவது, அந்தப் பிரிவுடன் சேர்த்துள்ள (B), (C) விலக்கு நிபந்தனைகளின் ஷரத்துகளை அனுசரித்து 1924-ம் வருஷத்துக் கண் டோன்மென்டுகளாக்டின்படித் தொழில் வரியாவது சொத்து வரியாவது, வீட்டுவரியாவது விதிக்கப் பெற்றிருக்கிறுரென்றுகிலும் விதிக்கப்பெறுகிறு ரென்றுகிலும் யாதொரு கடன்காரர் நம்புகிறுரோ அந்த ஜில்லாவின் கலெட்டருக்கு மேற்படி விஷயங் களைக் குறித்துச் சங்கதி தெரிவிக்கும்படி மேற்படி கடன்காரர் விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; அதன்மேல், கலெக்டரானவர் அந்த சங்கதியைத் தெரிந்துகொண்டு, மேற்படி கடனாளி மேலே கண்ட படி வருமான வரியாவது, தொழில் வரி, சொத்து வரி, அல்லது வீட்டு வரியாவது விதிக்கப் பெற்றி ருக்கிறுராவென்று கண்டு நிர்ணயிக்கப்பட்ட நமூனு வின்படி ஒரு யாதாஸ்தை மேற்படி கடன்காரருக் குக் கொடுக்கவேண்டும். அந்த யாதாஸ்தை, அதில் கண்டிருக்கும் விஷயங்களுக்கு ருஜுவாக ஒவ்வொரு கோர்ட்டிலும் ஏற்றுக்கொள்ளவேண் டும்.

சில விஷயங்களைக் குறித்துப் பிரதேச அதிகார சபைகளின் நிர்வாக அதிகாரிகள் சங்கதி தெரிவிக்கவேண்டுமென்பது.

27. யாதொரு கடன்காரர், தம்முடைய கடனாளி 3 (ii) பிரிவுடன் சேர்த்துள்ள (B), (C) விலக்கு நிபந்தனைகளின் ஷரத்துகளை அனுசரித்துத் தொழில் வரியாவது சொத்துவரியாவது வீட்டுவரியாவது விதிக்கப்பெற்றாரா அல்லது விதிக்கப்பெறுகிறாரா வென்று சங்கதி தெரிவிக்கும்படி யாதொரு மியுனிஸிபாலிடியின் நிர்வாக அதிகாரிக்காகிலும் யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டுக்காகிலும் சென்னை நகர விசாரணைச் சங்கத்தின் ரெவினியு ஆபீஸருக்காகிலும் விண்ணப்பம் செய்து கொள்ளலாம்; அதன்மேல், மேற்படி நிர்வாக அதிகாரியாவது ப்ரெஸிடென்டாவது ரெவினியு ஆபீஸராவது, அந்த விண்ணப்பத்தில் பெயர் கண்டிருக்கும் கடனாளி மேலே கண்டபடி தொழில் வரியாகிலும் சொத்துவரியாகிலும் வீட்டு வரியாகிலும் விதிக்கப் பெற்றிருக்கிறாரா வென்று கண்டு நிர்ணயிக்கப்பட்ட நமூனாவின்படி ஒரு ஸெர்டிபிகேட்டை மேற்படி கடன்காரருக்குக் கொடுக்கவேண்டும். அந்த ஸெர்டிபிகேட்டை அதில் கண்டிருக்கும் விஷயங்களுக்கு ருஜுவாக ஒவ்வொரு கோர்ட்டிலும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

விதிகள் செய்ய அதிகாரம்.

28. (1) இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றும் பொருட்டு மாகாண கவர்ன்மென்டார் விதிகள் செய்யலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்குப் பாதகமில்லாமலும்,

(*a*) நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று இந்த ஆக்டில் சொல்லி யிருக்கும் யாதொரு விஷயத்தைக் குறித்தும்,

(*b*) இந்த ஆக்டின்படிக்கான விண்ணப்பங்களின் நமூனுவையும் அவைகள் விஷயமாய்ச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களையும் நிர்ணயித்தும்,

(*c*) இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டு வருவதில் ஏற்படக்கூடிய எந்தக் கஷ்டத்தையாவது நீக்குவதற்காகவும் மாகாண கவர்ன்மென்டார் விதிகள் செய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படிச் செய்யப்படும் சகல விதிகளும் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமா யிருக்கவேண்டும். அவைகளை ஸர்க்கார் கெஜட்டில் பிரசித்தம் செய்யவேண்டும் ; அந்தப்படிப் பிரசித்தம் செய்யப்படுவதன்மேல், அவை இந்த ஆக்டிலேயே சேர்க்கப்பட் டிருந்தால் எப்படியோ அப்படியே செலாவணியாகும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

இந்த மாகாணத்தின் மூலாதாரக் கைத்தொழிலாகிய விவசாயத்துக்குப் புத்துயிரளிப்பதே இந்த மசோதா ஆக்டின் நோக்கமாகும். எல்லா ஜனங்களுடைய க்ஷேமமும் விவசாயியின் பொருளாதார க்ஷேமத்தைத்தான் நேர்முகமாகவோ, மறைமுகமாகவே பொறுத்திருக்கிறது. விவசாயியின் தற்போதைய பரிதாபகரமான நிலைமை எல்லாருக்கும் தெரிந்தததான். ஒருபுறம் அவருடைய வருமானம் குறைந்துவிட்டதென்றால், மற்றொருபுறம் அனேகமாய் அநியாய விதப்படி அவருடைய கடன்மேல் வட்டி சேர்ந்துகொண்டே வந்திருக்கிறது. இந்தக் கஷ்டத்தின் முக்கியமான அம்சத்துக்குக் கடன் சுமைதான் காரணம். ஜனங்கள் விஷயத்தில் தங்களுக்குள்ள பொறுப்புகளை உணர்ந்திருக்கும் தற்காலத்

திய எந்த கவர்ன்மென்டாரும், பொது மக்களின் உணவை உற்பத்தி செய்பவர்களை சகிக்க முடியாத இப்படிப்பட்ட சுமையினின்றும் விடுவிக்க கடமைப்பட்டவர்களாவார்கள். விவசாயத் தொழிலில் பரம்பரையாய் ஏற்பட்ட திறமையுள்ளவர்கள் வேலையற்றிருக்கும்படியும், விவசாயத் தொழிலுக்கே புதிதாயுள்ளவர்களின் வசத்தில் நிலம் போய்விடும்படியும் ஸர்க்கார் பார்த்துக்கொண்டிருப்பது சரியல்ல. சம்பந்தப்பட்டவர்கள் சமரஸமாய்ப் போகும் முறையும் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளுவதற்குரிய இதர முறைகளும் பலனளிக்கவில்லையாகையால், கட்டாயப்படுத்தும் கொள்கையை அனுசரிப்பது அவசியமாய்விட்டிருக்கிறது.

செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கும் அசலைச் செலுத்திவிட்டால், கடன் கொடுத்துத் தீர்க்கப்பட்டதாகக் கருதப்படவேண்டுமென்று இந்த மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறது. இந்த ஆக்ட் அமுலுக்கு வரும் தேதியிலிருந்து, வருஷமொன்றுக்கு 6¼ சத வீதத்துக்கு மேற்படாத வீதப்படி வட்டி வாங்கப்படும். உயர்ந்த வீதங்களின்படி வட்டி வாங்கப்படும் விஷயங்களில், அசலைப்போல் இரண்டு மடங்குள்ள தொகையைச் செலுத்தியிருந்தால், கடனாளி பின்னும் எவ்விதப் பொறுப்புக்கும் உட்பட்டிராமல் முற்றிலும் விடுதலையாவார். விவசாயமல்லாத இதர தொழில்களைச் செய்துவருபவர்கள் இந்த மசோதா ஆக்டினாலேற்படும் அனுகூலத்தை அடைய முடியாதபடிச் சாத்தியமானவரையில் விலக்கப்பட்டிருக்கிறார்கள். கவர்ன்மென்டாருக்கும், பிரதேச அதிகார சபைகளுக்கும், கோவாபரேடிவ் பாங்குகளுக்கும், சில ஜாய்ன்ட் ஸ்டாக் பாங்குகளுக்கும், சேரவேண்டிய தொகைகளுங்கூட இந்த மசோதா ஆக்டின் வியாபகத்திலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றன. இந்த மசோதா ஆக்டைத் தயார்செய்கையில், பிரச்னைகளைச் சுலபப்படுத்துவதற்கும் அவைகள் விஷயமாய் எளிதில் ஒரு முடிவுக்கு வருவது சாத்தியமாயிருப்பதற்கும் எல்லா விதமான முயற்சிகளும் செய்யப்பட்டிருக்கின்றன; இதனால் வழக்குகள் குறையும்.

நடைமுதல் பாக்கிகளைச் செலுத்தத் தவறிப்போவதை ஆதரிக்காமல் பழைய குத்தகைத் தொகை பாக்கிகளின்

சுமையிலிருந்து பாயக்காரிகளை விடுவிப்பதற்குங்கூட இந்த மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறது.

இந்த ரீதியில் சட்டம் செய்யப்படுமென்று எதிர் பார்த்து, கடன்காரர்கள் நிர்ப்பந்த முறைகளைக் கையாண்டு விவசாயிகளுக்குப் பெருந்துன்பத்தை உண்டாக்குவதாக அனேக புகார்கள் வந்திருக்கின்றன. ஆகையால், எந்தக் கடனுளிக்கு விரோதமாக 1937-ம்வருஷம் அக்டோபர்மீ 1வ முதல் நடவடிக்கைகள் நடத்தப்பட்டிருக்கின்றனவோ அந்தக் கடனுளிகள் இந்தச் சட்டத்தினுலேற்படும் அனுகூலத்தை அடையும்படிச் செய்ய உத்தேசித்திருக்கிறது.

சென்னை கவர்மெண்ட் மசோதா ஆக்ட்.

கௌரவம் பொருந்திய சென்னை லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளியாருக்கு.

விவசாயிகளுக்குப் பரிகாரம் அளிப்பதைக் குறித்த சென்னப் பட்டணத்து மசோதா ஆக்ட் விஷயமாய் ஆலோசிப்பதற்காக 1937-ம் வருஷம் டிஸெம்பர்மீ 21வயன்று நியமிக்கப்பட்ட ஜாய்ன்ட் ஸெலக்ட் கமிட்டியார் பின்வரும் ரிபோர்ட்டை வினயமாய்ச் சமர்ப்பிக்கிருர்கள் :—

2. இந்த மசோதா ஆக்டானது 1937-ம்வருஷம் டிஸெம்பர்மீ 1வ போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் எக்ஸ்ட்ராார்டினரியில் இங்கிலிஷிலும், 1937-ம்வருஷம் டிஸெம்பர்மீ 14வ தமிழிலும் தெலுங்கிலும் மலையாளத்திலும் கன்னடத்திலும் ஹிந்துஸ்தானியிலும் பிரசித்தம் செய்யப்பட்டது.

3. கமிட்டியார் 1937-ம்வருஷம் டிஸெம்பர்மீ 27வயன்று சேப்பாக்கத்திலுள்ள அஸெம்ப்ளி கட்டிடத்தில் சபை கூடி, கௌரவம் பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ வி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களைத் தங்களுடைய அக்கிராசனுதிபதியாகத் தெரிந்தெடுத்தார்கள். இதைத் தொடர்ந்து 1937-ம்வருஷம் டிஸெம்பர்மீ 28, 29, 30வகளிலும் சபை கூடினுர்கள்.

தங்களுக்கு அனுப்பப்பட்ட அனேக யாதாஸ்துகளில், (ஷை மசோதா ஆக்டைச்) சீர்திருத்துவதற்காகச் சொல்லப்பட்டிருந்த பற் பல யோசனைகளைக் கமிட்டியார் கவனித்தார்கள். அந்த யோசனைகளை அனுசரித்தும் செய்யப்பட்ட இதர ஆட்சேபனைகளை அனுசரித்

தும் கமிட்டியார் இந்த மசோதா ஆக்டில் கண்ட நிபந்தனைகளை நன்ருய்ப் பரிசீலனை செய்தார்கள்; அதன் பயனுக அதில் அனேக திருத்தங்கள் செய்திருக்கிருர்கள்.

4. முதலில் கொண்டுவரப்பட்டபடியுள்ள மசோதா ஆக்டில், வருஷமொன்றுக்கு 6 சதவீதத்துக்கு மேற்படாத ஒரு வீதப்படி 1937-ம்ஹு அக்டோபர்மீ 1உயிலிருந்துதான் சகல விஷயங்களிலும் வட்டி கணக்கிடப்பட வேண்டுமென்று நிபந்தனை கண்டிருந்தது. பொருளாதார மந்தத்துக்கு முந்தியுள்ள கால அளவில் பணத்தின் மதிப்பானது இப்போதிருப்பதைக் காட்டிலும் மிகவும் குறைவாயிருந்தது. அந்தக் கால அளவில் ஏற்பட்ட கடன்களுக்கும் பொருளாதர மந்தம் மிகவும் அதிகமாய்விட்ட பிறகு ஏற்பட்ட கடன்களுக்கும் வித்தியாசம் காட்டவேண்டுமென்று கமிட்டியார் முடிவு செய்தார்கள். முன் சொன்ன கடன்களைப் பின் சொன்னவைகளைக் காட்டிலும் அதிகமாகக் குறைப்பது நியாயமென்று கருதப்படுகிறது. அதற்கேற்ப, வட்டி பாக்கியை ரத்து செய்துவிடுவதற்காக இந்த மசோதா ஆக்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த நிபந்தனைகளை 1932-ம்ஹு அக்டோப்ர்மீ 1உ-க்கு முன் ஏற்பட்ட கடன்களுக்குமட்டும் பிரயோகப்படும்படிக் கமிட்டியார் வரையறுத்திருக்கிருர்கள். 1932-ம்ஹு அக்டோபர்மீ 1உயன்ருவது அதற்குப் பிறகாவது ஏற்பட்ட கடன்களின் விஷயத்தில், வட்டி வீதம் 5 சதவீதத்துக்கு அதிகமாயிருக்கும் விஷயங்களிலெல்லாம் அதை 5 சதவீதமாகக் குறைத்து விடுவதனுல் கடன்காரர்களின் நன்மை போதிய அளவுக்குப் பாதுகாக்கப்படுமென்று கமிட்டியார் கருதுகிருர்கள். 1932-ம்ஹு அக்டோபர்மீ 1உக்குப் பிறகு ஏற்பட்ட ஒரு கடனுனது முழுவதுமோ சிறிது மட்டிலோ அந்தத் தேதிக்குமுன் ஏற்பட்டதொரு கடனைப் புதுப்பித்ததனுல் ஏற்பட்டதாயிருந்தால், அந்தக் கடன் விஷயத்தில் அல்லது அதன் எந்த பாகமாகிலும் அப்படிப் புதுப்பிக்கப்பட்டதா யிருந்தால் அந்த பாகத்தின் விஷயத்தில் 1932-ம்ஹு அக்டோபர்மீ 1உக்கு முன் ஏற்பட்ட கடன் விஷயத்தில் போலவே நடவடிக்கை நடத்தப்படும். தம்டுபட் கொள்கையென்று சுருக்கமாகச் சொல்லப்பட்டிருப்பது அப்படியே வைத்துகொள்ளப் பட்டிருக்கிறது. வட்டியைக் குறைக்க உத்தேசித்திருக்கும் காரணத்தினுல், 1932-ம் ஹு அக்டோபர்மீ 1உக்குப் பிறகு ஏற்பட்ட கடன்கள் விஷயத்தில் அந்தக் கொள்கையை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது அனுவசியமாகும். ஆகவே, 1932-ம் ஹு அக்டோபர்மீ 1உக்குமுன் ஏற்பட்ட கடன்கள் விஷயத்தில் மட்டுமே வெளிப்படையாய் இந்த நிபந்தனை

ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முதலில் கொண்டுவரப்பட்டபடியுள்ள மசோதா ஆக்டில் 1937-ம்௵ அக்டோபர் ௴ 1௳யன்று சேரவேண்டியவையாயிருந்த சகல கடன்களின் வட்டியனைத்தையும் ரத்து செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நிபந்தனை ஆட்சேபிக்கப்பட்டது. பழைய கடன்களையும் புதிய கடன்களையும் குறைப்பதற்காகத் தாங்கள் ஏற்படுத்தியுள்ள இந்த நிபந்தனைகள் அந்த ஆட்சேபனையை நீக்குவதற்குப் பெரிதும் உதவுமென்று கமிட்டியார் கருதுகிறார்கள்.

5. எந்தக் கடன் அல்லது கடன்களாவது ஒரு ஸ்திரீக்குச் சேரவேண்டியிருந்து, அந்த ஸ்திரீ தனது ஜீவனத்துக்கு அந்தக் கடன் அல்லது கடன்களையே முழுவதும் நம்பியிருந்தால், அந்தக் கடன் அல்லது கடன்களையும் இந்த ஆக்டின் பிரயோகத்தினின்றும் கமிட்டியார் விலக்கிவிட்டிருக்கிறார்கள். அதற்கேற்ப, இந்த மசோதா ஆக்டின் 4-வது பகுதியில் அடியிற்கண்ட உடன் சேர்க்கையான பாபத்தை அவர்கள் சேர்ந்திருக்கிறார்கள்; அதாவது :—

"1937-ம் ௵ அக்டோபர் ௴ 1௳ யன்று வேறே யாதொரு சொத்தையும் சொந்தத்தில் வைத்திராத ஒரு ஸ்திரீக்கு அந்தத் தேதியில் சேரவேண்டியதாயிருந்த யாதொரு கடன் அல்லது கடன்கள்; ஆனால் அந்தக் கடன் அல்லது கடன்களின் அசலானது மூவாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டிருக்கக் கூடாது."

1937-ம் ௵ அக்டோபர் ௴ 1௳ யன்று அந்த ஸ்திரீக்குச் சொந்தமாயிருந்த சொத்தின் மதிப்பைக் கணக்கிடுகையில், அவர் வசித்த வீட்டையாவது அதிலிருந்த எவையேனும் மேஜை, நாற்காலி முதலிய சாமான்களையாவது அவருடைய தட்டுமுட்டுச் சாமான்களையாவது உடைகளையாவது நகைகளையாவது அதுபோன்ற சொந்த உபயோகத்துக்குரிய உடைமைகளையாவது கணக்கிலெடுத்துக் கொள்ளக் கூடாதென்று அவர்கள் நிபந்தனை கண்டிருக்கிறார்கள்.

6. ஒரு விவசாயத் தொழிலாளி அல்லது வேறே கிராமத் தொழிலாளிக்குச் சேரவேண்டிய யாதொரு கூலியையும் கம்மிட்டியார் இந்த ஆக்டின் பிரயோகத்தினின்றும் விலக்கிவிட்டிருக்கிறார்கள்.

7. இந்த ஆக்டினின்றும் நிவாரணை பெறுவதற்கு, ப்ரிடிஷ் இந்தியாவில் அல்லது ஒரு இந்திய சமஸ்தானத்தில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட யாதொரு கம்பெனியானது 1937-ம் ௵ அக்டோபர் ௴ 1௳யன்று குறைந்தது 500 மெம்பர்களை யுடையதாயிருந்திருக்க வேண்டுமென்று இந்த மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருந்தது.

இந்த நிபந்தனை அந்நிய நாட்டுக் கம்பெனிகளுக்குப் பிரயோகப்படவில்லை. கம்மிட்டியார் இந்த வித்தியாசத்தை நீக்கிவிட்டிருக்கிறார்கள். திருத்தியமைக்கப்பட்டயுள்ள மசோதா ஆக்டில் 1932-ம்ஹு ஆக்டோபர்மீ 1வுக்குப் பிறகு ஏற்பட்ட கடன்களுக்கு அனுகூலமாய் நிபந்தனை கண்டிருப்பது காரணமாக, முன் சொன்னதைவிடக் குறைவான மெம்பர்களையுடைய கம்பெனிகளுக்கும் இந்த நிவாரணை பிரயோகப்படும்படிச் செய்யவேண்டுமென்று கூறப்பட்ட யோசனையை ஏற்றுக்கொள்வது அவசியமல்லவென்று கம்மிட்டியார் கருதினார்கள்.

8. ஸெலெக்ட் கம்மிட்டியார் இந்த மசோதா ஆக்டில் செய்துள்ள மற்றொரு பெரிய மாறுதல் குத்தகைத் தொகைகளைப் பற்றியதாகும். குத்தகைத் தொகை பாக்கியை ரத்து செய்து விடுவதனால் இனிமேலும் குத்தகைத் தொகையைப் பாக்கியாய் விட்டு வைப்பதற்குப் பாயக்காரிகளுக்குத் தூண்டுதலேற்படுமென்று சிலர் பெரிதும் அஞ்சினார்கள். இந்த பயத்தை நீக்கும்பொருட்டு, பாக்கி சம்பந்தமாக அளிக்கப்படும் பரிகாரமானது நடைமுதல் காலத்தில் செலுத்த வேண்டிய தொகைகளைக் காலம் தவறாமல் செலுத்துவதைப் பொறுத்திருக்கவேண்டுமென்று இந்த மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருந்தது. ஒரு பாயக்காரிக்கு பழைய குத்தகைத் தொகை பாக்கி விஷயமாய்ப் பரிகாரம் அளிப்பதற்கு முன்னதாக 1347-ம் பசலிக்குச் சேர வேண்டிய குத்தகைத் தொகையை 1938-ம்ஹு அக்டோபர்மீ 30வுக்கு முன் அவர் செலுத்திவிடவேண்டுமென்னும் நிபந்தனையை ஏற்படுத்தி கம்மிட்டியார் இந்த நிலைமையை ஸ்திரப்படுத்தியிருக்கிறார்கள். பாயக்காரியானவர் 1347-ம் பசலிக்குச் சேரவேண்டிய குத்தகைத் தொகையை 1938-ம்ஹு செப்டம்பர்மீ 30வு யன்றாவது அதற்கு முன்பாவது செலுத்திவிட்ட பிறகு 1346-ம் பசலிக்குச் சேரவேண்டிய குத்தகைத் தொகையையும் 1939ம்-ஹு ஸெப்டெம்பர்மீ 30வுயன்றாவது அதற்கு முன்பாவது செலுத்தி விட்டால்தான் முந்திய பசலிகளுக்காகச் சேரவேண்டிய சகல குத்தகைத் தொகை பாக்கிகள் விஷயமாகவும் அவருக்குப் பூரண விடுதலை கிடைக்கும். 1347-ம் பசலிக்காகச் சேரவேண்டிய குத்தகைத் தொகையை 1938-ம்ஹு ஸெப்டெம்பர்மீ 30வுயன்றாவது அதற்கு முன்பாவது செலுத்தி விட்டு, 1346-ம் பசலிக்காகச் சேரவேண்டிய குத்தகைத் தொகையை 1939-ம்ஹு ஸெப்டம்பர்மீ 30வுயன்றாவது அதற்கு முன்பாவது செலுத்த அவர் தவறினாலும் அந்தத் தேதியன்றாவது அதற்கு முன்பாவது ஷை குத்தகைத் தொகையில் ஒரு பாகத்தைமட்டுமே அவர் செலுத்தினாலும் 1346-ம் பசலிக்காகவும் 1347-ம் பசலிக்காகவும் சேர

வேண்டிய குத்தகைத் தொகையில் எவ்வளவு பங்கை அவர் செலுத்தியிருக்கிறாரோ அதற்கேற்ற வீதாசாரப்படியே முந்திய பசலிகளின் பாக்கிகள் விஷயமாய் அவருக்குப் பரிகாரம் அளிக்கப்படும். இந்த நிபந்தனைகள் நடை முதல் காலத்தில் சேரவேண்டிய தொகைகளை வசூலித்துக்கொள்வதில் நிலத்துக் குடையவருக்கு உதவியா யிருப்பதோடு, தம்முடைய அசட்டையினாலேயே தமக்கு ஏற்படக்கூடிய கெடுதலினின்றும் பாயக்காரியை காப்பாற்றக்கூடியவைகளாயு மிருக்கின்றன. எந்த விஷயத்திலும் 1345-ம் பசலிக்காகச் சேரவேண்டிய பாக்கியை ரத்து செய்யக்கூடாதென்று ம-ா-ா-ஸ்ரீ ஜி. கிருஷ்ண ராவ் அவர்கள் மிகவும் வற்புறுத்தினார். ஆனால் நிலைமையை ஜாக்கிரதையாய் ஆராய்ந்த பிறகு, மூன்று பசலிகளில் ஏற்பட்ட சுமையை நிவர்த்திக்காமல் விட்டு விட்டால் பாயக்காரிக்கு வாஸ்தவமான பரிகாரமெதுவும் கிடைக்காதென்றும், பின்னும் அவ்வளவு அதிகக் கடன் சுமையோடு அவரை விட்டு வைத்தால் நடைமுதல் காலத்தில் சேரவேண்டிய தொகைகளை அவர் செலுத்துவதற்குத் தூண்டுதலிரா தென்றும் கம்மிட்டியார் முடிவு செய்திருக்கிறார்கள்.

9. நிலத்துக் குடையவரொருவர் 1920-ம் ஹுத்திய சென்னைப் பட்டணத்து லோகல் போர்டுகளாக்டின் பிரகாரம் செலுத்தவேண்டிய லாண்ட் ஸெஸ் என்னும் நிலவரியில் பாயக்காரியின் பாகத்தைச் செலுத்தியிருந்தால், அதை வசூலிப்பதற்கு அவர் பாத்தியதை யுடையவராவாரென்றும் கம்மிட்டியார் நிபந்தனை கண்டிருக்கிறார்கள். 1345-ம் பசலிக்காகவும் அதற்கு முந்திய பசலிகளுக்காகவும் தமக்குச் சேரவேண்டிய குத்தகைத் தொகை விஷமாய் நிலத்துக் குடையவரொருவர் தம்முடைய பாயக்காரிக்கு விரோதமாக ஏற்கனவே ஒரு டிக்ரி பெற்றிருக்கும் விஷயங்களில் அந்த டிக்ரியினால் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் மொத்த செலவுத் தொகைகளையும் அவர் வசூலித்துக் கொள்ளலாமென்றும் அவர்கள் நிபந்தனை கண்டிருக்கிறார்கள்.

10. மேலே கண்ட நிபந்தனைகளின் பலனாக, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கிய பிறகு யாதொரு பாயக்காரி குத்தகையாகச் செலுத்தும் எந்தத் தொகையாகிலும் முதலில் 1347-ம் பசலிக்கு அவரிடமிருந்து சேரவேண்டிய குத்தகைத் தொகைக்காகவும் பிறகு 1346-ம் பசலிக்கு அவரிடமிருந்து சேரவேண்டிய குத்தகைத்தொகைக்காகவும் செல்லு வைக்கப்படுமென்றும் முந்திய பசலி எதற்காகிலும் அவரிடமிருந்து சேரவேண்டிய எந்த குத்தகைத் தொகைக்காகவும் செல்லுவைக்கப்படாதென்றும் கம்மிட்டியார் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பாயக்காரியானவர் தாம் செலுத்தவேண்டிய குத்த

கைத் தொகையைக் கோர்ட்டில் கட்டிவிட்டு, முந்திய பசலிகளுக்கா கச் சேரவேண்டிய குத்தகைத் தொகை பாக்கிகள் விஷயமாய்த் தமக் குள்ள பொறுப்பை ரத்து செய்யும்படியாவது இந்த மசோதா ஆக்டில் கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் தமக்கேற்பட்டுள்ள பொறுப்பின் அளவை நிர்ணயிக்கும்படியாவது கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்வது அவருக்குச் சாத்தியமா யிருக்கும்படியும் அவர்கள் ஒரு நிபந்தனை ஏற் படுத்தி யிருக்கிறார்கள்.

11. 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் உரிய குத்தகைத் தொகையை வசூலிப்பதற்காகத் தொடரப்படும் வியாஜ்ஜி யங்கள் சம்பந்தமான காலவரை யறையை, 1347-வது, 1346-வது பசலிகளுக்குரிய குத்தகைத் தொகைகளைச் செலுத்துவதற்காக அனு மதிகக்கப்படும் தேதிகளிலிருந்து மூன்று மாதங்களுக்கு அதிகப்படுத்த வேண்டுமென்று கம்மிட்டியார் நிபந்தனை கண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அந்த பாக்கிகள் விஷயமாய்ப் பாயக்காரிக்குள்ள பொறுப்பானது அந்தத் தேதிகளில் அற்றுபோகும்.

12. இந்த மசோதா ஆக்டிலே கம்மிட்டியார் செய்துள்ள இதர திருத்தங்களில் மிகவும் முக்கியமானவை வரிசைக் கிரமமாகக் கீழே குறிப்பிடப்பட் டிருக்கின்றன :—

(1) **பகுதி** 3 (ii).—'விவசாயி' என்பதன் அர்த்தத்தில் நேராக ஒரு குத்தகைதாரரிட மிருந்தாவது ஒரு இடைக் குத்தகைதாரரிட மிருந்தாவது நிலத்தைப் பெற்றிருக்கும் கீழ்க் குத்தகைதாரர்களையும் கம்மிட்டியார் சேர்த்திருக்கிறார்கள்.

உட்பகுதி (iv).—'குத்தகைத் தொகை' என்பதில் அதற்காக ஒரு டிக்ரி அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கும் விஷயங்களும் அடங்குமென்பது இந்த உட்பிரிவில் ஸ்பஷ்டமாக்கப்பட் டிருக் கிறது.

கம்மிட்டியார் 'கடன்காரர்' என்பதன் அர்த்தமாகிய புதிய அர்த்தமொன்றையும் சேர்ந்திருக்கிறார்கள். அதில் வாரிசுகள், சட்ட சம்மதமான பிரதிநிதிகள், ஒப்படைதாரர்கள் என்பவையும் அடங்கும்.

(2) **பகுதி** 5.—எந்த வரிகள் விதிக்கப்படுவதனால் ஒரு அவிபக்த ஹிந்து குடும்பம் 'விவசாயி' யாக பாவிக்கப்படும் யோக்கியதை யற்ற தாய்விடுமோ அந்த வரிகளில் எதுவாகிலும் விதிக்கப்பெறும் அவிபக்த ஹிந்து குடும்பங்களுக்கான ஒரு பிரத்தியேக நிபந்தனை இந்தப் பகுதி யில் அடங்கியிருக்கிறது. முதலில் கொண்டு வரப்பட்டபடியுள்ள

ரூபத்தில் இந்த மசோதா ஆக்டான து மருமக்கத்தாயம் அலியசந்தான தரவாடுகளுக்கும் தாவழிகளுக்கும் பிரயோகப்படுவதா யிருந்தது. அப்படிப்பட்ட குடும்பங்களில் தனி நபர்கள் பாகப் பிரிவினை பெறு வது அசாத்தியமா யிருப்பதை யுத்தேசித்துப் பின் சொன்னவை இப் போது இந்தப் பகுதியினின்றும் விலக்கிவிடப்பட் டிருக்கின்றன.

(3) விவசாயிகளாயுள்ள அவிபக்த ஹிந்து குடும்பங்களைச் சேர்ந் தவர்களில் விவசாயிகளா யிராதவர்களுடைய சந்ததியார்கள் விஷயத் துக்குச் சம்பந்தப்பட்ட 6-வது பகுதினின்றுங்கூட ஷை குடும்பங்கள் விலக்கிவிடப்பட் டிருக்கின்றன.

(4) **பகுதி** 8—இந்தப் பகுதியைச் சேர்ந்த (2) உட் பகுதியி ளுல் 'பந்தக போக்கியமான கொதுவைகள்' தம்டுபட் விதியின் பிர யோகத்தினின்றும் விலக்கி விடப்பட்டிருக்கின்றன. சிலவிதமான கொதுவைகளில் கொதுவை வைத்துக்கொண்டவர்கள் கொதுவை வைக்கப்பட்ட சொத்தை தங்கள் சுவாதீனத்தில் வைத்துக்கொண் டிருப்பதை உத்தேசித்து, கமிட்டியார் 'பந்தக போக்கியமான கொதுவை' என்னும் வார்த்தைகளுக்குப் பதிலாக 'எந்தக் கொதுவை யின் பலனுக கொதுவை வைத்துக்கொண்டவர் கொதுவை வைக்கப் பட்ட சொத்தைத் தம் சுவாதீனத்தில் வைத்துக்கொண் டிருக்கிருரோ அப்படிப்பட்ட யாதொரு கொதுவை' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொண்டிருக்கிருர்கள். அசையாப் பொருளை வாங்கி அதைத் தம் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் ஒருவருக்கு, செலுத்தப்படாமலிருந்து அவரிடமிருந்து சேரவேண்டிய ஏதேனும் கிரயத் தொகையைச் செலுத்தவேண்டியதா யிருக்கும் பொறுப்பை யும் தம்டுபட் விதியின் பிரயோகத்தினின்றும் அவர்கள் விலக்கிவிட் டிருக்கிருர்கள்.

(5) **பகுதிகள்** 10, 11—(புதிய 11-வது, 12-வது பகுதிகள்).—இந்தப் பகுதிகளில், குறைக்கப்பட்ட கடன்களின்மீதும் புதிய கடன் களின்மீதும் வருஷத்துக்கு 6 சதவீதமுள்ள சாதாரண வட்டிக்குப் பதிலாக வருஷத்துக்கு $6\frac{1}{4}$ சதவீதமுள்ள சாதாரண வட்டியை உச்ச வட்டி வீதமாகக் கமிட்டியார் நிஷ்கரிஷை செய்திருக்கிருர்கள். ஏனென்ருல், அந்த வீதமானது மாதத்துக்கு ரூபாய்க்கு ஒரு தம்பிடி அல்லது வருஷத்துக்கு ரூபாய்க்கு ஒரு அணுவுக்குச் சரியாயிருக் கிறது. அதனுல் கிராமப் பிரதேசங்களிலுள்ளவர்கள் இதைப் பின் னும் சுலபமாகத் தெரிந்துகொண்டு அனுஷ்டிப்பார்கள்.

(6) **பகுதி** 15—(திருத்தி யமைக்கப்பட்டபடியுள்ள 21-வது பகுதி).—இந்தப் பகுதியானது கடனிறுக்கச் சக்தியற்றிருப்பதாகச் செய்யப்படும் தீர்ப்புகளுக்குச் சம்பந்தப் பட்டதாகும். எந்தக் கடனாளிகள் விஷயமாய்க் கடனிறுக்கச் சக்தியற்றிருப்பதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் அவர்களுடைய ஆஸ்திகள் இன்னும் பங்கீடு செய்யப்படாம லிருக்கின்றனவோ அந்தக் கடனாளிகளுக்கும் இந்தச் சட்டத்தின் பலன் கிடைக்கும்படிச் செய்யப்பட வேண்டுமென்று கம்மிட்டியார் கருதுகிறார்கள்.

13- கம்மிட்டியார் இந்த மசோதா ஆக்டிலுள்ள பகுதிகளின் வரிசையை விஷய தோரணைக் கேற்றபடி மாற்றி யமைத்திருப்பதுடன், இதில் விவகரிக்கப்பட்டுள்ள விஷயங்கள் பின்னும் தெளிவாய் விளங்கும்பொருட்டு இதை அத்தியாயங்களாகவும் பிரித்திருக்கிறார்கள்.

14. இந்த மசோதா ஆக்டில் வேறு பல மாறுதல்களையும் அவர்கள் செய்திருக்கிறார்கள். அவைகளை இங்கே குறிப்பிடுவது அவசியமென்று அவர்கள் கருதவில்லை. அவைகளெல்லாம் திருத்தப்பட்டபடி யுள்ளதும் இத்துடன் சேர்க்கப்பட்டுள்ளதுமான இந்த மசோதா ஆக்டின் பிரதியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

15. திருத்தி யமைக்கப்பட்டபடியுள்ள மசோதா ஆக்டை மீண்டும் பிரசித்தம் செய்ய வேண்டுமென்று கம்மிட்டியார் கருதுகிறார்கள்.

1937-ம் வருஷம்
டிஸெம்பர் மீ 30உ

ஸி. ராஜகோபாலாச்சாரியார்.
அக்கிராசனாதிபதி.

விவசாயிகள் (கடன்) பரிகார சட்டத்தின் கீழ் விதிகள்.

1938-ம் வருஷத்து விவசாயிகள் கடன் பரிகார சட்டத்தின் 28-வது பிரிவில் 2 (a), (b) உபவிதிகளின்படி சென்னை கவர்ன்மெண்டார் அடியில்கண்ட விதிகளை ஊர்ஜிதம் செய்து இயற்றியிருக்கிறார்கள்.

1. இச் சட்டத்தின் 18, 19, 20, 22 அல்லது 23-வது பிரிவுகளின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பம் எழுத்து மூலமாய் இருக்கவேண்டியது மல்லாமல், விண்ணப்பதாரரின் பெயரும், விலாசமும், எதிரியின் (ரெஸ்பான்டெண்ட்) பெயரும், விலாசமும் தாவாவைப்பற்றிய விவரங்களடங்கிய ஸ்டேட்மெண்டும், கோரப்படும் பரிகாரத்தைப் பற்றியும் கொண்டிருப்பதுடன், 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதமாக (ப்ளீடிங்) கை யெழுத்துபோட்டு, அது சரியானதென்று உறுதி மொழி கூறவும் வேண்டும்.

2. இச் சட்டத்தின் 26 அல்லது 27-வது பிரிவின்படி செய்து கொள்ளப்படும் விண்ணப்பமானது எழுத்து மூலமாயிருப்பதுடன் விண்ணப்பதாரரின் பெயரும், விலாசமும், வேண்டிய தகவலைப் பற்றியும், எந்த நபர் விஷயமாக தகவல் கேட்கப்படுகிறதோ அவருடைய பெயரும், விலாசமும், வேண்டிய காரணமும் கொண்டிருப்பதுடன், 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதமாக கையெழுத்து போட்டு, அது சரியானதென்று உறுதி மொழி கூறவும் வேண்டும்.

3. இச் சட்டத்தின் 18, 19, 20, 22, 23, 26 அல்லது 27-வது பிரிவுகளின்படி செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பனிரெண்டணு கோர்ட் பில்லை ஒட்டப்பட வேண்டும்.

4. (1) இச் சட்டத்தின் 26-வது பிரிவின்படி கடன் கொடுத்தவருக்கு கொடுக்கும் 'மிமோராண்டம்', சந்தர்ப்பத்துக்கேற்ற மாறுதல்களுடன், விதிகளுடன் சேர்த்துள்ள (A) நமூனப்படி யிருக்க வேண்டும்.

(2) இச் சட்டத்தின் 27-வது பிரிவின்படி கடன் கொடுத்தவருக்கு கொடுக்கப்படும் 'சர்டிபிகேட்', சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற மாறுதல்களுடன், விதிகளுடன் சேர்த்துள்ள (B) நமூனப்படி யிருக்க வேண்டும்.

A. நமூனு. (விதி 4 (1)-ன் கீழ்.)

1938-ம் வருஷத்து விவசாயிகள் (கடன்) பரிகார ஆக்ட் 26-வது பிரிவின் கீழ்....................கலெக்டர் அவர்களால் அளிக்கப்பட்ட மிமோராண்டம் :—

..................அவர்களுடைய........தேதியிட்ட விண்ணப்பம் பதிக்கப்பட்டது ; அவர்

(1) ....முடிவாகும் அரசிறை வருஷத்திற்கு........படி வருமான வரி.

(2) கண்டோன்மென்ட்டுக ளாக்டின்படி............முடிவடையும் அரை வருஷத்திற்கு, விவசாயமில்லாத மற்றைய தொழில் வருமானம், அரை வருஷத்திற்கு ரூபாய்............மேல் தொழில் வரி.

(3) கன்டோன்மென்ட்டுக ளாக்டின்படி, விவசாய நிலமல்லாத மற்றைய நிலங்கள் அல்லது கட்டிடங்களின் வருமானம்.........படி (இங்கு எந்த சட்டத்தின்படி தீர்வை விதிக்கப்படுகிறதோ அந்த சட்டத்தை எழுதவும்) வருஷ வாடகை மதிப்பு ரூபாய்...............க்கு சொத்து அல்லது வீட்டுவரி......................செலுத்துகிறார்.

கலெக்டர்.

B. நமூனா.

..................அவர்களுடைய மனு படிக்கப்பட்டது.

......................முனிஸிபாலிடியின் சர்வாதிகாரி அல்லது லோகல் போர்டின் பிரசிடென்ட் அல்லது சென்னை நகர விசாரணை சங்கத்தின் ரெவின்யூ ஆபீசராகிய நான்........................

(1) விவசாயத்தினால் அல்லாமல் இதர தொழிலினால் கிடைத்த ....முடிவடையும் அரைவருஷத்து வருமானம் ரூபாய் ....க்கு தொழில் வரி ரூபாய்............

(3) விவசாய நிலமல்லாத இதர நிலங்கள் அல்லது வீடுகள் விஷயமாய், மொத்தத்தில் வருஷ வாடகை மதிப்பு ரூபா............ ......ன் மேல் சொத்து அல்லது வீட்டுவரி

..................விதிக்கப்பெற்றிருக்கிறாரெனக் கூறுகிறேன்.

ஸர்டிபிகேட் கொடுக்கும் அதிகாரி.

சென்னை ஹைகோர்ட் (கனம் நீதிபதிகள் வரதாச்சாரியார், பாண்டுரங்க ராவ் அவர்கள் முன்பாக)

கோயம்பத்தூர் சப் கோர்ட்டில் வெங்கடரமணிஸ்வாமி கவுண்டர் பேரில் கொண்டு வரப்பட்ட அடமான தாவா, பிரதிவாதி அடமானம் நாமகார்த்தம் என்றும் பிரதி பலனற்ற தென்றும் வாதித்தும், டிக்கிரி செய்யப்பட்டது. அதன்மேல் ஹைகோர்ட்டிற்கு அபீல் செய்யப்பட்டது. இந்த கடன் 1932-ம் வருஷத்திற்கு முன்பு பட்டதால் தாங்கள் விவசாயிகளானதால் விவசாயிகள் கடன் பரிகார சட்டம் 8-வது செக்ஷன்படி பரிகாரம் கிடைக்கவேண்டுமென அபீல்தாரர் வாதாடினார். கீழ் கோர்ட்டில் கண்டபடி அடமானம் சரியானதென்றும், அபீல்தாரர், பரிகார சட்டப்படி அடையக் கூடிய பரிகாரத்தைப்பற்றி ஆலோசிக்க சாக்ஷியங்கள் வேண்டுமென்றும் ஆகையால் கீழ் கோர்ட்டுக்கு அனுப்பி இருதரத்தாரும் தங்களுடைய ஆக்ஷேப சமாதானங்களை மனுக்கள் மூலமாய் தெரிவிக்க அவகாசம் கொடுக்கவேண்டுமென்றும் கூறி கீழ் கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டது.

—'ஹிந்து' (24-3-38).

மதராஸ் லோகல் போர்டுகள்

சட்ட திட்டங்கள்

ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்து போர்டுகளை
குறித்த புத்தகம்

விலை ரூபா **6—0—0** மாத்திரம்

மோடார் வண்டிகளுக்கு வரி, போக்குவரத்து முதலியவைகளை
குறித்த ஆக்டுகள் அணா 10 மாத்திரம்

சி. வி. நாயுடு, அட்வொகேட்

திருவள்ளூர் (எம். எஸ். எம். ரயில்)

వ్యవసాయదారుల ఋణసహాయపు ఆక్టు తెనుగులో అణాలు 0-8-0

అడ్వొకేటు. పి. సత్యనారాయణరాజుగారి ప్రణీతము.

THE LAW OF

MADRAS LOCAL BOARDS

*(The only authoritative and up-to-date
book on Local Boards.)*

BY

C. V. NAIDU, ADVOCATE
TIRUVALLUR (M. S. M. Ry.)

**RECOMMENDED TO ALL THE
DISTRICT AND PANCHAYAT BOARDS
AND COURTS.**

Price Rs. 12-8-0 only
(Postage & Packing etc.)

Kesari Printing Works, Madras.

RC: 35

மதராஸ் லோகல் போர

சட்ட திட்டங்கள்

ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்து போர்டுக
குறித்த புத்தகம்

விலை ரூபா 6—0—0 மாத்திரம்

மோடார் வண்டிகளுக்கு வரி, போக்குவரத்து முதலியவைகளை
குறித்த ஆக்டுகள் அணா 10 மாத்திரம்

சி. வி. நாயுடு, அட்வொகேட்

திருவள்ளூர் (எம். எஸ். எம். ரயில்)

వ్యవసాయదారుల ఋణసహాయ ఆక్టు తెనుగులో అణాలు 0-8-0

అడ్వొకేటు. పి. సత్యనారాయణరాజు గారి ప్రణీతము.

THE LAW OF
MADRAS LOCAL BOARDS

*(The only authoritative and up-to-date
book on Local Boards.)*

BY

C. V. NAIDU, ADVOCATE
TIRUVALLUR (M. S. M. Ry.)

**RECOMMENDED TO ALL THE
DISTRICT AND PANCHAYAT BOARDS
AND COURTS.**

Price Rs. 12-8-0 only

(Postage & Packing etc.)